# பூச்செண்டு

30 காசு



## பொங்கல் மலர் சனவரி 1970

www.thamizham.net - Free E Books No TM 14721

GIVE US THE PLEASURE OF SERVING YOU
THE LARGEST AND MOST COMPREHENSIVE
RANGE OF DIESEL PARTS UNDER ONE PROOF

*Service Departments :*

Fuel Injection :

Calibration of Fuel Injection pumps reconditioning of injectors

Electrical ;

Electrical Starters Dynamos Magnetos and rewinding of Motors

Mechanical Engineering

Servicing of Industrial Plant and Equipment

*Manufacturing Lines :*

"DVD" Fuel Injection Pipes

"DVD" Carbon Brushes

"DVD" Field Coils

"DVD" Governor Diaphragm

"DVD" Nozzle Testers

"DVD" Fuel Injection Components

AGENTS

"PIONEER" 'O' RINGS, Oils Seals & Synthetic Packings

*( A FENNER COCKILL PRODUCT )*

**The Indian Engineering & Trading Company**

( ESTABLISHED 1949 )

15, Wallers Road, MADRAS


TELEPHONE : 86 /61 /88762 TELEGRAM : FUELPUMP

FACTORY : VYASARPADI

BRANCHES : BANGALORE-HYDERABAD

www.thamizham.net - Free E Books No TM 14721

# படையல்



கரும்புகை யொத்த பெரும்புய லோய்ந்திட
அரும்பும் மலரெலாம் அரும்பி மலர்ந்திட
விருந்தெதிர் கொண்டு விளைநிலம் மகிழ
அருமருந்து நல்கும் பொங்கலே வாழி
வஞ்சினம் கூறிய வீரமறவர் தோள்கள்
கெஞ்சிய விழிகளைக் காறி யுமிழ்ந்து
தஞ்சம்தம் கொள்கையெனத் தாளுயர்த்தி நின்ற
வெஞ்சின வீரர்க்குக் காணிக்கை இம்மலரே!

---

மலரடி விழைந்து மலர்போக்கத் துணைபோந்த
அலரல மனத்தார் அனைவரும் ஏற்றிடுக,
பொங்கல் வாழ்த்தை!

---

வாசகர்களுக்கு—

● அரசு அனுமதி அளிக்க மறுத்த காரணத்தால் மத்திய சிறைச் சாலை பேட்டி வெளியிட முடியாமைக்கு வருந்துகிறோம்

அடுத்த இதழில்
● தேர்வு முறை ஒழியட்டும்
● விளையாட்டு வீரர்கள்
● சேலம் சித்த வைத்தியர் சிவராஜ் எழுதும் "மாணவர்க்கு என் அறிவுரை"

www.thamizham.net - Free E Books No TM 14721

எல்லா விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளும் ஒரே முகவரி: (தனிப் பட்ட பெயர்களுக்கு எழுத வேண்டாம்)

ஆசிரியர் குழு,
"பூச்செண்டு"
19, நௌரோசி வீதி,
சென்னை-31.

## ஆண்டு சந்தா ரூ 4

## ஆசிரியர் குழு

[பதிப்பாசிரியர்: பேராசிரியர். திரு சு இராசேந்திரன், எம். ஏ.]

திரு. இ. ஜே. சுந்தர் (I எம். ஏ.) பச்சையப்பன் கல்லூரி

திரு. வில்லியம் பெர்ணண்டஸ், சி.டி. (ஏ. எம். ஐ. இ.)

திரு. ஈ. எஸ். மெர்வின் (III பி, ஏ.)

திரு. அ. மா. சீ. செயினுல்லாபுதீன் (III பி. ஏ.) பச்சையப்பன் கல்லூரி

திரு. ந. ஆ செயவேலன் (இறுதியாண்டு எம். பி பி எஸ்) சென்னை மருத்துவக் கல்லூரி

திரு. இ. துரைசாமி (III எம். பி. பி. எஸ்.) ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி

திரு. ஜே. சுயராஜ் (எல். எம். இ.)

புகைப்படங்கள்: திரு. யோகானந் (பி எஸ்ஸி.) [சினித் ஸ்டுடியோ]

ஓவியக்குழு: திரு. துளசிதாஸ் (VI பி. இ) பொறியியற் கல்லூரி, சென்னை

திரு. டி. வி. பார்த்தசாரதி பி. எஸ்ஸி.

அட்டைப்படச் சிறப்பு: திரு. சீனிவாசன்

## செயற் குழு உறுப்பினர்கள்

**திருச்சி:**

திரு. பொ. இரத்தினம் (iii பி.காம்) தேசியக் கல்லூரி

திரு. இளங்கோ ஆ. இரா. (ii பி. எஸ். ஸி.) பெரியார் கல்லூரி

திரு க. செல்லப்பன் (iii பி.எஸ் ஸி.) புனித சூசையப்பர் கல்லூரி

திரு அ. சாகுல் அமீது (i பி.எஸ்ஸி) ஜமால் முகம்மது கல்லூரி

திரு எஸ். சி பாலுராஜன் (ii பி ஏ) தேசியக் கல்லூரி

திரு ப. கணபதி (ii பி. காம்.) தேசியக் கல்லூரி

**மதுரை:**

திரு. வி. வே. மாலன் (iii இளமருந்தாக்கியல்) மதுரை மருத்துவக் கல்லூரி

திரு வீ. செ. அன்பழகன் (iii இளமருந்தாக்கியல்) மதுரை மருத்துவக் கல்லூரி

திரு கா. பரதன் (ii பி. காம்) மதுரைக் கல்லூரி

www.thamizham.net - Free E Books No TM 14721

திரு சிவசூரியன் (ii பி. ஏ) மதுரைக் கல்லூரி
திரு வி. பழனியப்பன் (iii பி. ஏ.) தியாகராசர் கல்லூரி
திரு இராம. அங்கணன் (ii பி. ஏ.) அமெரிக்கன் கல்லூரி
திரு கு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் (ii பி. இ.) தியாகராசர் பொறியியற் கல்லூரி

**சென்னை :**

திரு அர. கல்யாணராமன் (iiiபி.ஏ.) விவேகானந்தா கல்லூரி
திரு இராம் மோகன் (ii பி. எஸ்ஸி.) சமணக் கல்லூரி
திரு எம் எஸ். இராமச்சந்திரன் (i பி. ஏ) கிறித்துவக் கல்லூரி
திரு நந்தகோபால் (பி.யு.சி) கிறித்துவக் கல்லூரி
திரு சி. சுப்பிரமணியன் (ii எம். எல் இ.) இராம கிருஷ்ணு மிஷின் தொழிற்கல்வி நிலையம்
திரு கு. தண்டபாணி (i பி.எஸ்.ஸி.) து. கோ. வைணவக் கல்லூரி
திரு வி. இ. ராஜா தேசிங்கன் (முன்னிலை) இலயோலா கல்லூரி

**சேலம் :**

திரு ஆர். மாதையன் (முன்னிலை) கந்தசாமி கண்டர் கல்லூரி வேலூர்
திரு சு. இரவி (iii பி இ.) அரசினர் பொறியியற் கல்லூரி

**திருநெல்வேலி :**

திரு பா. முத்துசாமி (ii பி. ஏ) தூய சவேரியார் கல்லூரி
திரு அ ஹரிஹர சுப்பிரமணியன் (iii பி.எஸ்.ஸி.) இந்துக் கல்லூரி
திரு நா. ஆறுமுகம் (iii பி. எஸ் ஸி.) இந்துக் கல்லூரி

**தூத்துக்குடி :**

திரு வே. இரமணன் (iii பி. காம்.) வ. உ. சி. கல்லூரி
திரு இரா. அன்டோ மச்சாடு (iii பி.ஏ.) வ. உ. சி. கல்லூரி

**அண்ணுமலை பல்கலைக்கழகம்.**

திரு இரா. குமணன் (iii பி.ஏ.)
திரு இரத்தின கணேசன். புலவர் இடைநிலை
திரு கே. கண்ணன் (ii பி. ஏ.)

**பிற இடங்கள் :**

திரு ராஜாராம் (iii பி. ஏ.) தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்
திரு கே. கணேசன் (i பி. காம்). அழகப்பர் கல்லூரி காரைக்குடி
திரு பழ. சிங்கார வேலு (i பி. ஏ,) பச்சையப்பன கல்லூரி காஞ்சி
திரு இருதயதாசன் (iii பி. எஸ். ஸி) இந்துக் கல்லூரி, நாகர்கோயில்
திரு ப. தமிழினியன், புலவர் நிறைநிலை, திருவையாறு
திரு அ. ஜஹபர் சாதிக் (மின்னியல் இறுதியாண்டு) வலிவலம் தேசிகர் பன தொழில் நுட்பக் கல்லூரி, நாகூர்
திரு. க. மாணிக்கம் (i சிவில் & ரூரல் என்சினியரிங்) இராமகிருஷ்ணு மிஷின் வித்யாலயா, பெரிய நாயக்கன் பாளையம்.
திரு. தேவகுமார் (iii பி எஸ்ஸி) மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி
திரு. மு. சோமசுந்தரம், புலவர்நிறைநிலை தருமைத் தமிழ்க்கல்லூரி. மாயூரம்
திரு. கி. பாலசுப்பிரமணியன் (ii பி காம்) தகரக்கல்லூரி, கல்கத்தா


**மகளிர் :**

செல்வி வி. ஆனந்தி (ii பி. எஸ்ஸி) எஸ் ஐ.இ டி. கல்லூரி, சென்னை
செல்வி வி. ஆர். வான்மதி (ii பி எஸ்ஸி) எஸ். ஐ இ. டி. கல்லூரி, சென்னை
செல்வி அருணு (i பி. ஏ) அரசினர் மகளிர் கல்லூரி சென்னை
செல்வி க. கருப்பாயி (iii பி. ஏ.) மீனுட்சி கல்லூரி மதுரை
செல்வி கே. எஸ். கிருஷ்ணவேணி (ii பி. ஏ.) பி. எஸ். ஜி. ஆர். கிருஷ்ணம்மாள் கல்லூரி கோவை
செல்வி இ. மல்லிகா (iiபி.ஏ.) நாராயணு வனிதா கல்லூரி, கொல்லம் கேரளம்

**இலங்கை :**

செல்வி இராதா (இளங்கலை) மகளிர் கல்லூரி, கொழும்பு

www.thamizham.net - Free E Books No TM 14721



# மாறுமோ இந்த நிலைமை...

செங்கரும்பின் சுவையினை நம்வாயும் நெஞ்சும் சுவைத்தாலும் கூட அடிக் கரும்பைத் தின்று விட்ட குழந்தையின் முகம் போன்று சில நிகழ்வினைகளை எண்ணும் போது அறிய வரும் போது நெஞ்சம் ஓலமிடுகின்றது.

கோவையில் நடந்த மாணவர் கிளர்ச்சி ஒரு பக்கம் சட்டக் கல்லூரிக்குச் செல்லும் வாய்ப்பினைப் பெறத் துடிக்கும் அறிவியல் துறையினரின் ஒரு பகுதியினர் எழும் கூக்குரல் ஒரு பக்கம் — ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் செல்லத் தகுதி பெருத கலைத்துறையினரின் ஒரு பகுதியினரின் ஆவேசக் குரல்...இதன் மத்தியில் மாணவர் குழாமும் பேராசிரியர் குழாமும் ஒருமித்துச் செல்லாத பெருங் குறையால் விளையும் கிளர்ச்சிகள் — எப்பொழுதும் போல் பஸ் கண்டக்டருக்கும் மாணவர்க்கும் நடக்கும் கிளர்ச்சிகள் இவ்வாருன கிளர்ச்சிகளினூடே புத்தாண்டும் மலர்ந்து பொங்கலும் பொங்கியாகி விட்டது. ஆனல்...

நிலைமை சீர்திருந்தியதாக அல்லது சீர்திருந்தும் என்ற நிலைமையில் உண்டாக வேண்டிய துர்லபமான! நிலைமையில் மாணவர் சமுதாயம் இருக்கின்றது! 'பழையன கழிதல்' என்றவாறு பழைய கிளர்ச்சிக் கொள்கைகள் விடப்பட்டு இனியாவது நல்ல முடிவுகள் — நிலைமைகள் உருவாக்கிட மாணவரும் சமுதாயமும் இந்த புத்தாண்டுச் சவாலாக இதனை ஏற்பார்களா?

www.thamizham.net - Free E Books No TM 14721

# சிறுகதைப் போட்டி முடிவுகள்

**முதல்பரிசு : ரூ 50**

பெறுபவர் : திரு. எம். சகாப்தின், மருத்துவக்கல்லூரி, மதுரை-11.

வழங்குபவர் : திரு. ஜி. உமாபதி

**இரண்டாம் பரிசு : ரூ 25**

பெறுபவர் : திரு. மனோகரன், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.30.

வழங்குபவர் : திரு. T. R. பிஞ்ஞாயிர

**மூன்றும் பரிசு : ரூ 10**

பெறுபவர் : செல்வி. லட்சுமி ரேவதி, சென்னை-16.


வழங்குபவர் : ஆசிரியர் குழு

பரிசு பெறாத, சில நல்ல கதைகளும் தொடர்ந்து வெளியிடப்படும்

“கொடுப்பது தான் மூன்றாவது பரிசு கொடுக்கிறீர்கள் போடுவதாவது முதலில் போடக் கூடாதா?” என்கிறார்கள் சில வாசகர்கள்

எனவே மூன்றாவது பரிசுக் கதையே முதலில் வெளியாகிறது.

---



**நரிக்குறவர் திறப்புவிழா நடத்தினார்**

**வி. ஜி. பி. யின் இன்னொரு சாதனை!**

தேசியச் சுற்றலா கண்காட்சியில், மிக வேடிக்கையான நிகழ்ச்சி வி. ஜி. பி. அரங்கை ஒரு நரிக்குறவர் திறந்து வைத்தது தான். நரிக்குறவருக்கு வி. ஜி. பன்னீர்தாஸ் மாலை அணிவித்த போது மக்கள் கரவொலி எழுப்பினர். மாலையை அணிந்து கொண்ட நரிக்குறவரும் மகிழ்ச்சியினால் நீண்ட நேரம் தானே கை தட்டிக் கொண்டிருந்தார்.

www.thamizham.net - Free E Books No TM 14721

# அன்னை மகிழ்ந்தாள்

செல்வி. எம். கே. லட்சுமி ரேவதி

பௌர்ணமி நிலவில் . பனிவிழும் இரவில்... என்று பாடிய வண்ணம் கண்ணாடியின் முன் நின்று தலை வாரிக் கொண்டிருந்தான் ராஜா. முன் நெற்றியில் ஆட்டுக் கொம்பைப் போல் தலை முடியை சிலிப்பிக் கொண்டதும் அவன் முகத்தில் திருப்தி மிளிர்ந்தது. உண்மையில் அழகான அந்த முகத்திற்கு வளைந்தாடும் சுருள்முடி அழகிற்கு அழகு சேர்ந்தது போலவே இருந்தது. புத்தம் புதிய கோட்டையும், சூட்டையும் அணிந்துக் கொண்டு கம்பீரமாய் நிமிர்ந்து நின்ற போது மகனின் அழகையும், கம்பீரத் தோற்றத்தையும் கண்டு பூரித்துப் போனாள் கமலம். அவள் மட்டுமா? அவனும் கூடத்தான். மகிழ்ச்சிக் கடலில் மிதந்துக் கொண்டிருந்தான். இன்று அவன் வாழ்விலேயே மறக்க முடியாத நாளல்லவா? பட்டதாரி என்று பலர் முன்னிலையில் பட்டம் வாங்க போகும் திருநாள். யாருக்குத்தான் மகிழ்ச்சி இருக்காது! அனைவருக்குமே பட்டம் வாங்கும் அந்த பாக்கியம் கிடைத்து விடுகிறதா?

“அம்மா நான் போய் வரட்டுமா?” என்றவன் கமலத்தின் முகத்தைப் பார்த்தவுடன் திகைத்தான்.

“ஏனம்மா! ஒரு மாதிரியாய் இருக்கிறீர்கள்? கண்களில் ஏன் இந்த கலக்கம்?”

“ராஜா! ராஜா!! நீ பட்டம் வாங்கும் காட்சியை நான் பார்க்கணும்னு துடித்துக் கொண்டிருந்தது உனக்குத் தெரிந்திருந்தும் என்னை விட்டுவிட்டுப் போகிறாயேடா! வயசான என் ஆசையை நிராசையாக மாற்றிவிடாதேடா ராஜா! மாற்றி விடாதே. என்னை அழைத்துப் போடா” விழிகளில் நீர் மலர்கள் சிதறிவிழ கெஞ்சினாள் கமலம்.

“அம்மா! அம்மா!! உங்களுக்கு எத்தனை முறைச் சொன்னாலும் ஏன் அம்மா புரியவில்லை? இத்தனை நாட்கள் என்னைப் பெரிய பணக்காரன் வீட்டு பிள்ளை என்று நினைத்து பழகும் நண்பர்கள் முன்னிலையில் உங்களை அழைத்துக் கொண்டு போய் இவர்தான் என் அம்மா என்று சொன்னால் என் மதிப்பு என்னம்மா ஆவது? எல்லோர் முன்னிலையிலும் நம் பஞ்ச நிலையை பறைசாற்ற வேண்டும் என்று நினைக்கிறீர்களா?”

“இல்லை ராஜா இல்லை. உன்னை எல்லோரும் பாராட்ட வேண்டும், என்பதுதான் என் ஆசை. அடுப்பில் வெந்தும் என் எலும்பை உடைத்தும் உன்னை படிக்க வைத்து விட்டேன் என் லட்சியம் நிறைவேறப் போகிறது. நீ பலபேர் முன்னிலையில் பட்டதாரின்னு பட்டம் வாங்கப் போகும் அந்தக் காட்சியை காண வேண்டும் என்று தா

www.thamizham.net - Free E Books No TM 14721

னேடா இவ்வளவு காலம் உழைத்தேன். அப்படிப் பட்டவளின் ஆசையை மதிக்காமல் போகிருயே ராஜா! நீ வேண்டுமாஞல் என்னுடன் இணைந்து கூட நடந்து வர வேண்டாம். நீ முன்ஞல் போ, நான் பின்ஞல் வருகிறேன். உன் பணக்கார நண்பர்கள் முன்ஞல் என்னை உன் அம்மா என்று கூட சொல்லிக் கொள்ளாதே ஆஞல் என்னை மட்டும் விட்டுவிட்டுப் போய் விடாதேடா" கல்லும் கரையும் வண்ணம் கெஞ்சினுள் கமலம்.

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தான் ராஜா.

"அம்மா! உங்களை அழைத்துப் போஞலும் அந்த கும்பலில் எங்கே அம்மா உட்கார வைப்பது?"

"இது என்னடா கேள்வி! உட்காருவதாவது எங்கேயாவது ஒரு ஜன்னலின் ஓரமாய் நின்று உன்னைப் பார்த்தால் போதாதா?"

"சரி சரி! வேறு ஏதேனும் நல்ல புடவையாக உடுத்திக் கொண்டு புறப்படுங்கள்."

"வேறு நல்ல புடவைக்கு நான் எங்கே போவேன் ராஜா?"

"நேரமாகிறது புறப்படுங்கள்" தலைவிதியே என்று கமலத்தை அழைத்துக் கொண்டு புறப்பட்டான் ராஜா.

ராஜா முன்ஞல் நடக்க ஐந்தடி பின்ஞல் தான் நடந்தாள் கமலம் தன்னைக் கடந்து வேகமாகப் போகும் பஸ்களையும் கார்களையும் போலவே. வாழ்வில் இடம் பெற்ற இன்ப துன்பங்கள் நிழற் படமாய் அவள் மனக் கண் முன் ஓடின.

ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள் தான் கமலம். அறிவை வழங்கிய இறைவன் கல்விச் செல்வத்தை கடுகளவும் அவளுக்கு வழங்கவில்லை. கமலத்தை மணந்துக் கொண்டவனும் அதே கதிதான். வேலை செய்தால் வயிறு நிறையும், வேலை இல்லை என்ருள் வயிறு காயும் நிலை.! வறுமையுடன் கூட மக்கள் செல்வமும் இல்லையே என்று வருந்திஞள் கமலம் கமலத்திற்கு முப்பத்தி ஐந்து வயது நிரம்பியவுடன் கிடைத்தற்கரிய செல்வமாய் பிறந்தான் ராஜா. பட்டகாலிலேயேபடும் கெட்ட குடியே கெடும் என்று சும்மாவா சொல்லியிருக்கிருர்கள்? ராஜாவிற்கு மூன்ருவது வயது நிரம்பும் முன்னே காலன் வந்து கமலத்தின் கணவனை


# HIMALAYA

ASBESTOSE CEMENT PIPE FITTINGS
*ARE GUARANTEED FOR*
STRENGTH LEAKAGE AND BETTER FINISH
Phone : 442376

HIMALAYA INDUSTRIES,
C/O. MODERN RADIO & ELECTRONICS,
23, Usman Road, Jain Buildings, MADRAS-17.


www.thamizham.net - Free E Books No TM 14721

அழைத்துக் கொண்டு போய் விட்டான் புயலில் சிக்கிய கப்பலைப் போல துடித்தாள் கமலம்.

•

கல்விச் செல்வம் இல்லாத காரணத்தால் கூலிவேலை செய்தும், அப்பணம் இட்டும் வாழ்க்கையை ஒட்டினாள். எந்தச் செல்வம் தனக்கு இல்லையோ, அந்த செல்வத்தை மகன் பெற வேண்டும். பட்டம் வாங்க வேண்டும், பலரும் போற்ற அவன் வாழ வேண்டும் என்று துடித்தது அந்த தாயுள்ளம்.

•

வயதான காலத்தில் அவளாகவே விரும்பி கேட்ட போதும் அவளை அழைத்துக் கொண்டு வெளியே போனவனல்ல ராஜா. அவனது மனப் போக்கை அவள் உணர்ந்து கொண்ட போதும் இந்த ஒரு காட்சியை மட்டும் காண வேண்டும். என்று துடித்தது கமலத்தின் உள்ளம். அதில் ஞாயம் இருக்கத்தானே செய்கிறது.

"அம்மா! எங்கே போகிறீர்கள் இங்கே தான் பஸ் ஏற வேண்டும்" ராஜாவின் குரல் தான் பனியாய் பெருகிய சிந்தனையிலிருந்து அவளை விடுவித்தது.

பஸ்ஸிலிருந்து இறங்கியதும் "ராஜா! வாடா வா!" என்று மாணவர் பட்டாளம் சூழ்ந்து கொண்டது.

"ராஜா? இன்னைக்கு உன் 'டிரஸ் ரொம்ப பிரமாதம். மிகவும் காஸ்டிலி டிரஸ் என்று சொல். இவ்வளவு பணத்தை போட்டு வாங்க நான் எங்கே போவேன்." பெருமூச்சு விட்டான் ஒருவன்.

"டேய் ராஜா! உன்னுடன் வந்திறங்கினார்களே இவர்கள் யார்?"

"இவர்களா?" என்று நீட்டி முழங்கும் ராஜாவைப் பார்த்தாள் கமலம்.

"நானுப்பா? ராஜா வீட்டு ஆயா நான். சின்ன வயதிலிருந்து அவனை தூக்கி வளர்த்தவள் அவன பட்டம் வாங்கப் போகும் காட்சியை பார்க்க வேண்டும் என்று சொன்னேன். ராஜா அழைத்து வந்தான்," என்றாள் கமலம்.

ஒரு கணம் ராஜாவுக்கு என்னவோ போல் இருந்தது. ஆனால் அதை அவன் காட்டிக் கொள்ளவே இல்லை. அம்மா அதோ அந்த ஆடிடோரியத்தில் போய் அமர்ந்து கொள்ளுங்கள் நான் வந்து விடுகிறேன் என்று போனவன் போனவன் தான.

செல்வத்தில் மிதப்பவர்களின் கூட்டம் வழிந்து கொண்டிருந்தது. எங்கும் அமர இடமில்லாமல் இருக்கவே ஒதுக்குப் புறமான இடமாகப் பார்த்து நின்று கொண்டாள் கமலம்.

தலைவர் அவர்கள் வர சற்று நேரமாகும் என்ற அறிவிப்பு ஒலிபரப்பாகவே ஒரு சில மாணவர்கள் கான மழை பொழிந்து கொண்டிருந்தார்கள். மாணவர்களின் மகிழ்ச்சியில் வானமும் பங்கு கொண்டது போலும் 'சோ' வென்ற இரைச்சலுடன் பெரும் மழை கொட்ட ஆரம்பித்து விட்டது.

'திடீர்'—என்று தலைவர் வருகிறார்கள் என்ற அறிவிப்பு கேட்டவுடன்

---

● உலகில் மொத்தம் ஒரு கோடி குருடர்கள் இருக்கிறார்களாம்! அரசியல் குருடர்கள், கருத்துக் குருடர்கள் கணக்கெல்லாம் இதில் சேர்க்கப்படவில்லை.

---

www.thamizham.net - Free E Books No TM 14721

அமைதி எங்கும் பரவியது. ஆம்! கல்லூரியின் சொந்தக்காரரும், முதல்வருமான அவர் பின்னால் நடந்து வருவது யார்? ராஜாவிற்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை. கமலம் ஏன் அவர் பின்னால் செல்ல வேண்டும். இதோ மேடையில் அவருக்குப் பக்கத்திலேயே அம்மா நிற்கிறாளே — ராஜாவிற்கு எதுவுமே புரியவில்லை. எப்படி புரியும்?

கொட்டும் மழை சாரலில் நனைந்து வெடவெடக்க நின்றுக் கொண்டிருந்த கமலத்தை காரிலிருந்து இறங்கிய தலைவர் பார்த்தார். அவர் தான் சிவராமன் பார்த்தவுடன் அவர் உள்ளம் துடித்தது. 'அம்மா' மழையில் ஏன் நிற்கிறீர்கள்? உள்ளே வந்து உட்கார்ந்து பார்க்கலாமே' என்றவர் கமலத்தின் கைகளை பிடித்துக் கொண்டு மேடைக்கே போய் விட்டார். அவருக்குப் பக்கத்தில் கமலத்திற்கு ஆசனம்.

இப்பொழுது தலைவர் அவர்கள் பேசுவார்கள் என்று அறிவிக்கப்பட்டவுடன் கம்பீரமாக எழுந்து நின்றார் சிவராமன்: "மாணவப் பெருமக்களுக்கு என் வணக்கம். இந்த பட்டமளிப்பு விழாவில் தலைமை தாங்கும் பொறுப்பை எனக்களித்த உங்கள் அனைவருக்கும் என் நன்றி.

கல்வி அறிவினை வெறும் ஏட்டோடு விட்டு விடாதீர்கள். அதன் பயனை உழைத்துப் பெறுங்கள். நானும் அவ்வழியின் முன்னுக்கு வந்தவன் தான். கல்வி என்பது என்னவென்று அறியாத குடும்பத்தில் பிறந்தேன். என் அன்னை இரவு பகல் என்று பாராமல் அரும்பாடு பட்டு என்னை படிக்க வைத்தார். அவரது விருப்பப்படியே படித்தேன்—அவரது ரத்தத்தில் மட்டுமல்ல உழைப்பாலும் உருவானேன். 'நீ பெற்றஇக் கல்வி செல்வத்தால் பலரும் பயனடைய வேண்டும்' என்று என் அன்னை கேட்டுக் கொண்டு உயிர் விட்டார்கள். அதன் பின்னே அவர் பெயர் தாங்கியே எனது சாரதா கல்லூரி உருவானது. முதன் முதலில் பட்டமளிப்பு விழாவை என் அன்னையிருந்து சிறப்பிக்காமல் போய் விட்டாரே என்று வருந்தினேன். ஆ

*With best compliments from :*

**South India Structural Corpn., Ltd:,**
6, Armenian Street, Madras-1.

PHONES : OFFICE : 27837
WORKS : 53306

GRAMS : "SOUTHINCO"

**Civil and Structural Engineers and Contractors**

We undertake Fabrication and Erection of
All kinds of Light and heavy Structural
Works at our Workshop.
1050, T. H. ROAD, TIRUVOTTIYUR, MADRAS-19.

**Heavy Structural Works will be fabricated at the work-spot itself**
**Enquiries Solicited.**

www.thamizham.net - Free E Books No TM 14721

னால் இப்பொழுது அந்தக் கவலை எனக்கு இல்லை. இதோ என் அருகில் அமர்ந்திருக்கும் இவரை முதன் முதலில் பார்த்தவுடன் என் அன்னையின் நிழலைக் கண்டேன் யார் வந்து சிறப்பிக்க வேண்டும் என்று நினைத்தேனோ அவரே விண்ணுலகில் இருந்து வந்து விட்டாரோ என்று நினைத்தேன் என் அன்னைக்கு ஒப்பான இவர் கையாலேயே உங்கள் பட்டங்களைப் பெற்று நீங்கள் செழிக்க வேண்டும். உங்களால் நாடு செழிக்க என்று வேண்டிக் கொள்கிறேன். தலைவர் உரை முடிந்தவுடன் கமலத்தின் கழுத்தில் மலர் மாலை விழுந்தது.

கமலம், "இது எல்லாம் என்னப்பா! ஏதோ கனவுலகில் நடப்பது போல் இருக்கிறதே நான் கீழே போய் விடுகிறேன்" என்ற போது சிவராமன் விடவில்லை.

ஒவ்வொருவரையும் மனமார வாழ்த்திக் கொண்டே பட்டம் வழங்கினாள் கமலம். ராஜா வரமாட்டானா ஏங்கியது அந்த உள்ளம் என் மகனுக்கு நானே பட்டமளிக்கிறேன் எனப் பூரித்தாள் கமலம்.

ராஜா வந்து கைகளை நீட்டிய போது அவன் முகம் ஒளியிழந்த முகமாகவே இருந்தது. கண்கள் பனித்தன. கமலத்தின் விழிகளும் இன்ப ஊற்றாகியது.

விழா முடிந்தவுடன் தன் காரிலேயே கமலத்தை அழைத்துக் கொண்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் வள்ளுவர் ஆண்டு தைத் திங்கள் 27-ம் நாள் (9-2-70) காலை 7-00 மணியளவில் பெரியோர்களால் நிச்சயித்தபடி

எனக்கும்

புன்னையம்பதி திரு. T. M. பர்னாண்டோ அவர்கள் புதல்வி

திருநிறைச்செல்வி. **ஒலிவியாவுக்கும்**

புன்னை புனித ஆன்னாள் ஆலயத்தில் நடைபெறும் திருமணவார்த்தைப்பாட்டிற்கும் அதன் பின் மணமகள் இல்லத்தில் நடைபெறும் மற்ற வைபவங்களுக்கும் பூச்செண்டு வாசக, செயற்குழு அன்பர்கள் இதையே அழைப்பிதழாகக் கொண்டு கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறேன்.

இவண்,

**வில்லியம் பர்னாண்டஸ்**

பொறுப்பாசிரியர்

தந்தி : புன்னைக்காயல்

ஆத்தூர் (திருநெல்வேலி மாவட்டம்)

www.thamizham.net - Free E Books No TM 14721

டு போய் வீட்டில் விட்டு வரும்படி பணித்தார். காரிலிருந்து இறங்கியதும் இறங்காததுமாக தன் கையிலிருந்த மலர் மாலையை அவளுக்கு அணிவித்து மலர் பாதங்களை முத்தமிட்டு கதறினான் ராஜா. அம்மா அம்மா! என்னை மன்னித்து விடுங்கள் நான் மகா பாவி. என்னை உருவாக்கிய உங்களை நான் அவமதித்து விட்டேன். அன்னை என்பவள் எவ்வளவு உயர்வானவள் என்பதை நான் உணர்ந்து விட்டேன். இரவு பகல் என்று பாராமல் உழைத்து என்னை படிக்க வைத்த தங்களுக்கு நான் எப்படி பட்ட நன்றியை செய்திருக்கிறேன். பத்து மாதம் சுமந்து பெற்ற உங்களை உடன் அழைத்துப் போனால் என் கௌரவம் குறைந்து விடும் என்று நினைத்தேனே நான் எவ்வளவு கொடிய பாவியம்மா. நீங்கள் தான் என் அம்மா என்று சொல்லிக் கொள்ள வெட்கப்பட்டேனே உங்கள் மகனாக நான் பிறந்திருக்கவே அருகதை அற்றவன். என்னை மன்னித்து விடுங்கள் அம்மா, படித்திருந்தும் பண்பில்லாத இந்த மூடனை மன்னித்து விடுங்கள்."

"ராஜா ராஜா" கமலத்தின் கைகள் ஆதரவுடன் அவனை அணைத்துக் கொண்டன. "நீ என்னடா தவறு செய்தாய் ராஜா? நீ தவறு செய்ததா நான் நினைக்கவில்லையே. நீ குழந்தை. உலகம் அறியாதவன் ஏதோ அசட்டுத்தனமாக நடந்துக் கொண்டாய் அதே சமயம் நீயாகவே உணர்ந்து கொண்டாயே 'அது போதும் ராஜா, அது போதும்." நீர் மலர் பூத்து கன்ன மேடையில் மாலை கட்ட இதழ்கள் சிரிக்க அன்னையின் மகிழ்வில் பங்கு கொண்டான் ராஜா.

தன்னைத் தானே எரித்துக் கொண்டு மணம் பரப்பி அழிந்து விடும் அன்புருவங்களில் அன்னையும் ஒருவள் தானே. அவள் உள்ளம் மகிழ்கிறதென்றால் அம் மகிழ்ச்சிக்கு இணை இவ்வுலகில் உண்டா?


Phone : 440278

Learn Car Driving in

# 15 Days

Moderate Fees ! Efficient & Expert Coaching !!

## BALMAN DRIVING CENTERE

(Opp. Mambalam Rly. Station)

31, Ranganathan Street, MADRAS-17.

N. B. : We also undertake to coach Ladies.


www.thamizham.net - Free E Books No TM 14721

## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER

# "POOCHENDU"

( *A Student's Monthly in Tamil* )

## FORM IV

[ See rule 8 of the Registration of news papers ( Central Rule 1956 ]

| | | |
|---|---|---|
| 1. | Place of Publication : | Madras-31. |
| 2. | Periodicity of its publication : | Monthly |
| 3. | Printer's Name : | Mr. F. William Fernandez |
| | Nationality : | Indian |
| | Address : | Rex Trading Co., Printing Section<br>31, Jones Street, M |
| 4. | Publisher's Name : | Mr. S. Rajendran, |
| | Nationality : | Indian |
| | Address : | Madras-31. |
| 5. | Editor's Name : | Mr. S. Rajendran, |
| | Nationality : | Indian |
| | Address : | Madras-31. |
| 6. | Name and addresses of individuals who own the Newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital. | Mr. S. Rajendran,<br>19, Nowroji Road,<br>Madras-31. |

I, S. Rajendran, hereby declare that the particulars given are ture to the best of my knowledge and belief.

Madras,
1—1—70

(Sd-) S. RAJENDRAN
Publisher,

www.thamizham.net - Free E Books No TM 14721

# "மாணவர் ஆபாசத்திரைகளால் பாதிக்கப்படுகின்றனர் என்பது பூச்செண்டின் திடமான கருத்து"

## இது பற்றி ஒரு நடிகையுடன் உரையாடல்

இன்றைய திரைவானில் மின்னிக் கொண்டிருக்கும் நடிகை ஒருவரை இல்லத்தில் சந்தித்து மேற்கண்ட கேள்வியைக் கேட்டோம். உரையாடல் மிக காரசாரமாக அமைந்தது. ஒளிவு மறைவில்லாத நேரிடையான கேள்விகள் எழுப்பினோம். ஆனால் தனது பெயரை அவர் வெளியிடவேண்டாம் என்று தெரிவித்ததால் பெயர் குறிப்பிடாமல் உரையாடலை மட்டும் இங்கு குறிக்கிறோம்.

**நாங்கள் :-** புதுமை எண்ணங் கொண்ட மாணவர்கள் சிலரால் நடத்தப்படும் "பூச்செண்டு" என்ற பத்திரிகையிலிருந்து வருகிறோம்.

**நடிகை :** மகிழ்ச்சி, என்ன பேட்டியா?

**நாங்கள் :** வழக்கமான பத்திரிகைகள் நடத்தும் பேட்டிக்காக நாங்கள் வரவில்லை. "மாணவர் ஆபாசத்திரைகளால் பாதிக்கப்படுகின்றனர் என்பது பூச்செண்டின் திடமான கருத்து" இது பற்றி நீங்கள் என்ன சொல்கிறீகள்.

**நடிகை :** (மெல்லிய சிரிப்பு) மறுக்கவில்லை ஆனால் திரை ஆபாசத்திற்கு காரணம் நீங்கள் தான்?

**நாங்கள் :** (திகைப்பு) எப்படி? நடிகைகள் ஆபாசமாக நடிப்பதால் தானே திரை இன்று ஆபாசமாக இருக்கிறது.

**நடிகை :** (நிமிர்ந்து உட்கார்ந்து) கொஞ்சம் பொறுங்கள் விளக்கமாகச் சொல்லுகிறேன்.

www.thamizham.net - Free E Books No TM 14721

ஆபாசப் படங்கள் வருவதற்குக் காரணமே ரசிகர்கள் தான் ரசிகர்களில் பெரும்பாலோர் மாணவர்கள் ரசிகர்களின் ரசிப்புச் சுவையை அனுசரித்துத்தான் படாதிபதிகள் படம் எடுக்கிறார்கள் உதாரணமாக திடீரென்று திரு A. P. நாகராஜன் புராணக் கதையான திருவிளையாடலை எடுத்தார், எதிர்பாராத விதமாக அந்தப் பாணி மக்களுக்கு பிடித்து அமோக வெற்றியளித்து தொடர்ந்து அதே பாணியில் பல படங்கள் எடுத்தார் ஆனால், சில படங்களுக்குப் பின் அவர் தன் பாணியை மாற்றிக் கொள்ள வேண்டிய தாயிற்று. அது போல ஜேம்ஸ்பாண்ட் பாணியில் படம் எடுக்கும் முறையும் மாற்றிக் கொள்ள வேண்டிய நிலைக்கு வந்து விட்டது.

இன்றைய ரசிகர்கள் ஆபாசத்தைத்தானே ரசிக்கிறார்கள். நீங்களே பார்க்கிறீர்கள். . ஒரு சில ஆபாசமற்ற நல்ல படங்கள் வந்த போதிலும் லாபக்கணக்கில் அவை நஷ்டமே அடைகின்றன எந்த ஒரு மனிதனும் வியாபாரத்தில் நஷ்டப்படுவதற்காக ஒரு வேலை செய்ய மாட்டான் எனவே படாதிபதிகள் மக்கள் விரும்புகிற வகையில் படமெடுக்க வேண்டியதாய் இருக்கிறது எனவே நாங்களும் அவர்கள் சொல்கிறபடி உடையணிந்து நடிக்க வேண்டியிருக்கிறது.

**நாங்கள் :** இருக்கலாம் ஆனால் நீங்கள் ஏன் எல்லோரும் சேர்ந்து அவ்வாறு நடிக்க மறுப்பு தெரிவிக்கக் கூடாது.

**நடிகை :** நடக்கிற காரியமா அது.?

**நாங்கள் :** ஒரு குழந்தை கத்தியை விரும்புகிறது என்பதால் கத்தியை கொடுப்பது போல இருக்கிறது உங்களது போக்கு

**நடிகை ;** குழந்தை கேட்டால் கொடுக்கக் கூடாது
நேரத்தில் வளர்ந்த மனிதன் கேட்டால்
வேண்டியிருக்கிறது. ரசிகர்கள் பொ
அல்லவே.

**நாங்கள் ;** இதை ஒப்புக் கொள்ள முடியாது. எப்போதுமே மனிதர்கள் குழந்தைகளைப் போல கெட்ட விஷயங்களை எளிதாக பற்றிக் கொள்வார்கள் அதனால் கெட்ட விஷயங்களை நீக்க சமுதாய சாதனங்கள் துணை செய்ய வேண்டுமே ஒழிய அவைகளை வளர்க்கவா செய்வது?

**நடிகை :** நீங்கள் சொல்வதையும் நான் எளிதாக ஒப்புக் கொள்ள முடியாது மனிதர்கள் நினைத்தால் சில கெட்ட விஷயங்களை எதிர்க்க வில்லையா? உதாரணமாக மதுவிலக்கு இல்லையா

**நாங்கள் :** ஆம்! இப்படியே ஆபாசம் அளவுக்கு மீறி தொடருமானால் நிச்சயம் திரைக்கு எதிர்ப்பு தெரிவிக்க நல்ல மாணவர்கள் தயங்க மாட்டார்கள்.

www.thamizham.net - Free E Books No TM 14721

**நடிகை :** என்னைப் போன்ற நடிகைகள் இதனை வரவேற்கிறோம். நல்ல பாத்திரங்கள் எடுத்து நடிப்பதற்குத் தான் ஆசையாக இருக்கிறது ஆனால் ரசிகர்களின் ரசிப்புத்தன்மை மிகவும் கீழ்த்தரமாக இருக்கிறதே அதை மாற்ற வழி செய்யுங்கள்.

**நாங்கள் :** நிச்சயம் எங்களால் ஆனதைச் செய்வோம். அதே நேரத்தில் படாதிபதிகள், நடிகைகளின் ஒத்துழைப்பும் இதற்குத் தேவை. மனம் திறந்து இவ்வளவு நேரம் பேசியதால் உங்களுடைய கஷ்டங்கள் தெரிகிறது திரைக்கு பின்னால் இருக்கும் உங்களை மட்டுமே குறை சொல்லிப் பயனில்லை. சரிபாதியான தவறு திரைக்கு முன்னால் இருப்பவர்களிடமே இருக்கிறது என்பது தெரிகிறது.

நன்றி விடைபெறுகிறோம்.

**நடிகை :** வணக்கம்.

(தொடரலாம்)

பேட்டி : "ஆசிரியர் குழு"


*Always Use*

**KHATAU VOILES**

(A Name in Good Voiles

*Popular For The Past 90 Years*

*In Up-to-dote And Attractive Designs*

*At Moderate rotes*

LARGEST STOCKISTS:

**7. RAMAMURTHY, RAMALINGAM & CO.**

16-D, GODOWN ST., MADRAS-1.

Phone Nos : 28083 & 28093

Resi : 65718 & 35491

Grams : RANGACO


www.thamizham.net - Free E Books No TM 14721

# பொங்கலோ பொங்கல்!

இ. துரைசாமி,
(இரண்டாம் ஆண்டு மருத்துவம்)
ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி சென்னை.

பொழுது விடிந்தது கூடிடுவோம் – தைப்
பொங்கல் வந்தது ஆடிடுவோம்
உழுதுண்டு வாழும் உழவர்களே! – பார்
உயர்ந்திட இறைவனை தொழுதிடுவோம்.

மாவிலைத் தோரணம் கட்டிடுவோம் – அதில்
மஞ்சள் கமுகினை கூட்டிடுவோம்.
வாழைக் கன்றினை சார்த்திடுவோம் – நறு
பாளை தென்குலைச் சேர்த்திடுவோம்.

வண்ணப் புதுப்பானை முற்றத்திலே – இறை
வாழ்த்தி அடுப்பினில் ஏற்றிடுவோம்
உண்ணப் பலரையு மழைத்திடுவோம் - பலர்
உண்டு களித்திட செய்திடுவோம்.

தமிழரின் தீரத்தைப் பாடிடுவோம் – நல்
தேந்தமிழ் சாத்திரம் தேடிடுவோம்
அமிழின் தமிழ்மொழி போற்றிடுவோம் - தொல்
ஆருயிர் காவியம் சாற்றிடுவோம்.

பாரத வீரத்தை எடுத்துரைப்போம் - மிகை
பழந்தமிழ் தீரத்தை அடித்துரைப்போம்
நோகவே செய்வாரை கொன்றிடுவோம் - பகை
நேர்மையில் நாமே வென்றிடுவோம்.

www.thamizham.net - Free E Books No TM 14721

நம் நாட்டின் மக்கள் பழக்க வழக்கங்களிலும் மரபுகளிலும் வேறுபட்டிருக்கின்றனர். வழக்கங்கள் இயற்கை நிலைக்கும், தட்பவெப்ப நிலைக்கும் ஏற்றபடி மாறுபடுகின்றன.... இருப்பினும் நூற்றாண்டுகள் காலமாக பொருந்தி இணைக்கப்பட்டுள்ள நமது பண்பாடு, இந்த வெளிப்படையான மாறுபாடுகளை உயிருள்ள இசைவிணக்கமாக மாற்றுகின்றது.

அதன்றி, வேறுபாடுகள் நிறைந்த இந்த நாட்டை இணைத்துப் பின்னி, சமூக, பொருளாதார அமைப்பை ஆதரிப்பது இந்திய இரயில்வே - ஆசியாவிலேயே பெரிய, உலகத்திலேயே இரண்டாவது பெரிய தனிப்பட்ட அமைப்பு; அதன் வழி நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு உதவுகிறது.

சுமார் 15 இலட்சம் இரயில்வே ஊழியர்கள், எடுத்துக் காட்டுமளவுக்கு தங்களை அளித்து 'தான்' என்ற உணர்விற்கு முன்பு தொண்டினையும், எல்லாவற்றிற்கும் முன்பாக நாட்டினையும் நிலை நிறுத்துகிறார்கள்.

**— தென் பிராந்திய இரயில்வே வெளியிட்டது**

—விளம்பரம்

www.thamizham.net - Free E Books No TM 14721

# ஒ ரு கா ட் சி

"சுஜாதா"

"பதிநாலாவது ஆளாக உன்னிடம் இதைச் சொல்கிறேன். நீயாவது நம்புகிறாயா பார்க்கலாம்"

[நானும் சத்யனும் சினிமாவுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தோம. கொஞ்சம் நேரமாகி விட்டது. இந்திப் படம். முதலில் லைஃபாய் சோப், ஈனோ! விளம்பரங்கள் - நிறையச் செல்லும் கொஞ்சம் விட்டுப் பிடிக்கலாம் என்று மெதுவாகத் தான் கிளம்பினோம். பஸ் ஸுக்காக தாமதிக்கையில் என் இந்த அனுபவத்தை இது வரை புலப்படாத இந்த நிகழ்ச்சியை அவனிடம் சொன்னேன்.]

" ஜஸ்ட் இமாஜின் என்னைப் போல ஒரு சாதாரண, வருமான வரி கொடுக்கும், இந்தியக் குடியரசின் பிரஜை மத்திய சர்க்கார்ஊழியன் என் அலுவலகத்தை விட்டு ஒரு தடவை நடுப்பகலில் வெளியே வருகிறேன் - விண்டர்' வெயில் உறைப்பதற்காக, வெளியே வருகிறேன் அந்தக் காட்சியைப் பார்க்கிறேன்.

"எந்தக் காட்சியை?"

"குறுக்கே பேசாமல் கேள். ஆபீஸை விட்டு வெ. வருகிறேன். எதிரே



தெரிவிது ஒரு 300 400 அடிப்புல் தரை அப்புறம் காம்பவுண்ட் சுவர். வெளியே செல்லும் அகலமான

www.thamizham.net - Free E Books No TM 14721

வாசல் துல்யமான இதமான வெயில். காம்பவுண்டுக்குள் இடது பக்கம் கட்டடங்கள். அதில் ஒன்றிலிருந்து ஒரு பெண் வருகிறாள் கவனி. கூர்மையாக கவனி.

அந்தப் பெண் உயரமான அழகான பெண் பஞ்சாபியாக இருக்கலாம். வளைய வேண்டிய இடத்தில் வளைந்த மேனி கோபால்ட் நீலத்தில் ஸாரி அணிந்திருந்தாள்


இடது பக்கத்திலிருந்து அவள் வருகிறாள் மெதுவாக. ஒயிலாக நடக்கிறாள்... ஞாபகத்தில் நிற்கும் நடை. வாயிலை அணுகுகிறாள்.

காம்பவுண்ட் சுவரின் மறைவிலிருந்து திடீரென்று ஒருத்தன் தோன்றுகிறான் அவளை நெருங்குகிறான் அவன் அவளை மணி கேட்கிற மாதிரி தோன்றுகிறது அவள் தயக்கத்துடன் தன் கெடிகாரத்தைப் பார்க்கிறாள் அதே சமயம் அதே சமயம்.

## இந்தக்கதை

## எழுதியவரைப் பற்றி . . .

'சுஜாதா' விண்வெளியுகத்தின் முன்னணி எழுத்தாளர். மிக அதிகமான மாணவ உள்ளங்களைக் கவர்ந்த இவரது சொந்த ஊர் திருச்சி. இயற்பெயர் ரங்கராஜன். எலக்டிரானிக் இஞ்சினியரிங் பட்டதாரியான இவர் டில்லி சப்தர்ஜங் விமான நிலையத்தில் விமான அதிகாரியாகப் பணியாற்றுகிறார். முப்பத்தைந்து வயது நிறைந்த இவருக்கு இரண்டு குழந்தைகள். நகர வாழ்க்கையின் நவீனத்தை சித்தரிப்பதிலும், இசையிலும், தமிழில் புதிய பாணி உரைநடை அமைப்பைப் புகுத்துவதிலும் ஆர்வம் கொண்டவர். பூச்செண்டின் பால் தனி ஆர்வமும், வளர்ச்சியில் ஆதரவும் காட்டும் அன்பர்



அவள் அருகில் ஒரு அம்பாஸிடர் கார் வந்து சரேல் என்று கத்தி சொருகினாற் போலக் றீ... ...ச் சிட்டு நிற்கிறது. அந்தக் காரின் பின் கதவு திறக்கிறது அதிலிருந்து மற்றவர்கள் வெளியே பாய்கிறார்கள். மணி கேட்டவன் சரேல் என்று அவள் கரங்களை முழங்கைக்கு மேல் பற்றி தள்ளுகிறான். பின்னால் இருந்தவன் அவள் கழுத்தை வளைத்து முகத்தில் கைக்குட்டை ஒன்றை வைக்கிறான் இருவரும் அவளை வலியக் காரில் திணிக்கிறார்கள்

நான் அவர்களை நோக்கி ஓட ஆரம்பிக்கிறேன்.

அவள் திமிர்கிறாள் சத்தம் போடுகிறாள்.

அவளால் அதிகம் கத்த முடியவில்லை முகத்தில் பரவின கைக்குட்டையில் 'பெண்டதால்' மாதிரி ஏதாவது இருந்திருக்க வேண்டும் மயக்கம் வருவது போலத் தெரிகிறது அவர்கள், வளர்ந்த ஆண்கள். அவள் உடை கலைகிறது திணறுகிறாள் திணறுகிறாள் மயங்கி விடுகிறாள் அதற்கெல்லாம் முன்னாலேயே கார் கிளம்ப ஆரம்பித்தது விட்டது. அவளை முழுவதும்

www.thamizham.net - Free E Books No TM 14721

**இரண்டு ரூபாய்க்கு கத்தியை வாங்கி அதைக் காட்டி கடைக்காரனிடம் இரண்டாயிரம் பறிப்பதைப் போல் மனிதன் தன் சிந்தனையை இறைவனுக்கு எதிராகப் பயன் படுத்துகிறான்**

உள்ளே தள்ளி பின் கதவு சாத்திய தும் கார் வேகம் கொண்டு பறக்கிறது.

நான் ஒரு 100 அடி தூரத்தில் இருக்கும் போது கார் முழு வேகம் கொண்டுபுழுதிகிளப்பிமெதற்கு பக்கம் பாதையில் திரும்பிட்டு செல்வதைப் பார்க்கிறேன். மேலே காம்பவுண்டுச் சுவர் மறைகிறது நான் இன்னும் ஓடிக் கொண்டிருக்கிறேன். என் னென்னவோசப்தம்போட்டேன்ஞாபகமில்லை அந்தக் கார் போன உடன் இடது பக்கத்திலிருந்து மற்றொரு வாகன் ஒன்றும் உடன் புறப்பட்டு அந்தக் காருடன் சேர்ந்து கொண்டது. என்னால் எவ்வளவு தான் ஓடமுடியும்? இரைத்தது

நான் காம்பவுண்டு சுவரை விட்டு வெளி வாயிலில் வந்த போது வெகு தூரத்தில் அந்த இரண்டு கார் களும் தெரிகின்றன பின் காரின் நம்பர் லேசாகப் பார்த்த ஞாபகமிருக்கிறது. நிர்சலனமாக இந்த இடத்தில் தான் அந்த சம்பவம் நடந்ததா என்று இருக்கிறது ரஸ்தா. 500 அடித் தொலைவில் ஒரு ஆட்டோரிக்ஷாகாரன் பின் சீட்டில் தூங்கிக் கொண்டிருக்கிறான் ஒரு நாய் அவர்கள் சென்ற திக்கைப் பார்த்து குரைத்துவிட்டு தடவைகளைத்து விட்டுப் படுத்துக் கொள்கிறது.

"என் நிலையில் நீ என்ன செய்வாய்?"

"போலீஸுக்குத் தெரிவிப்பேன்"

"நான் என்ன செய்தேன் உடனே ஆட்டோரிக்ஷாக்காரரை எழுப்பி (முனகினான்) ஹோல்டிங்ஸ் ரோடு போலீஸ் ஸ்டேஷனுக்கு விடச் சொன்னேன். போலீஸ் நிலையத்தில் என் அவசரத்தில் ஒடின இறைப்பில் இலக்கணப் பிழைகளுடன் நடந்ததைச் சொன்னேன்.

அந்த இன்ஸ்பெக்டர் என் முகத்தையே சற்றுப் புன்சிரிப்புடன் பார்த்து "இந்த சம்பவம் எங்கே நடந்தது" என்றான்

என் ஆபீஸ் இருந்த இடத்தைச் சொன்னேன் ——

"அப்படியானால் இது எங்கள் கண்காணிப்பில் வராது போதி ரோடு போலீஸ் நிலையத்துக்குச் செல்லுங்கள்" என்றான் சாவதானமாக

"இதை நீங்கள் முன்னாலேயே சொல்லியிருக்க வேண்டும்"

"நீங்கள் என்னைப் பேசவேவிடவில்லையே"

சபித்துக் கொண்டு லோடி ரோடு போலீஸ் நிலையத்துக்குச் சென்றேன் அங்கிருந்த இன்ஸ்பெக்டர் இங்கிலீஷ் பேசினான் அவனிடம் ஒரு பெண்ணை இளைஞர்கள் பலாத்காரமாகக் கடத்துவதை என் கண்ணால் பார்த்தேன் பட்டப் பகலில் இந்த அக்கிரமம் நடந்தது என்றேன்.

அவன் அவசரமே படாமல்கேட்டான் நான் யார் என் தொழில் என்ன என் தாத்தா பேர் என்ன எங்கே நடந்தது இது......

நான் சொல்வதை எல்லாம்

www.thamizham.net - Free E Books No TM 14721

உருதுலிபியில் தலைகீழாக விசித்திர மாக எழுதிக் கொண்டான்.

"இரண்டு கார்கள்?"

"ஒரு கார் ஒரு வான். முதல் காரில் கடத்தினார்கள். உடனே மற்றது அதனுடன் சேர்ந்து கொண்டது. அதில் நிறைய ஆசாமிகள் இருந்தார்கள்"

"காரின் நம்பர் பார்த்தீர்களா?"

"அந்த வானின் நம்பர் லேசாக ஞாபகமிருக்கிறது டி எல்.ஒ. 9954 என்று நினைக்கிறேன்"

"யூ ஆர் நாட் ஷ்யூர்?"

"நோ"

"அந்தப் பெண்ணை வர்ணிக்க முடியுமா?"

"நீல ஸாரி உயரமான பெண்"

"எத்தனை மணிக்கு இது நடந்தது?"

"பிற்பகல் 12-30க்கு சுமார்"

"இப்பொழுது மணி ஒன்றரை. முதலில் அந்தக் காரை பற்றி கவனிக்கலாம்..."

டெலிபோனை எடுத்து கார்பரேஷனின் ராஜ்பூர் ரோடு கார் ரிஜிஸ்ட்ரேஷன் பிரிவுக்கு டெலிபோன் செய்தார்.

எனக்கு அந்த இன்ஸ்பெக்டர் இந்தக் கேஸைை எடுத்துக் கொள்ளும் அலட்சியமும் மெதுவும் பிடிக்கவே இல்லை. பறக்க வேண்டாமோ? உடனே ஜீப்பை அனுப்ப வேண்டாமோ என்ன என்னவோ செய்ய வேண்டாமோ?

பஞ்சாபியில் பேசினான். நான் கொடுத்த கார் நம்பரைக் கொடுத்தான் வைத்தான் 'லெட்ஸ் வெய்ட்'

"அவ்வளவு தானா, நீங்கள் வேறு எதுவும் செய்யப் போவதில்லையா?"

"மிஸ்டர்! நீங்கள் கொடுத்த தகவல்களைப் பற்றி யோசியுங்கள். ஒரு பெண்ணை சிலர் கடத்தினார்கள் என்கிறீர்கள். அப்புறம் ஒரு சந்தேகமான கார் நம்பர். மிகவும் அரை குறையான வர்ணனை. நீல ஸாரி உயரமான பெண். இதை ஆதாரமாக வைத்துக் கொண்டு நாங்கள் இண்டர் ஸ்டேட் வைர்லஸ்ஸுக்குத் தகவல் தெரிவித்தால் சிரிப்பார்கள். முதலில் நீங்கள் யார்? பெண்ணுக்குத் தெரிந்தவர்களோ உறவினர்களோ இதுவரை புகார் கொடுக்கவில்லை. அதற்கு நாங்கள் காத்திருக்க வேண்டும்"

"கார் நம்பர் இருக்கிறதே"

"அதைப்பற்றி இதோ தெரிந்து விடும். பதட்டப் படாதீர்கள். சட்டம் மெதுவாகத்தான் கிளம்பும்"

---

## என்ன செய்யப் போகிறார்கள்

சென்னை பாரிமுனையிலிருந்து பூக்கடை வரை பிளாட்பாரங்களில் பாதசாரிகள் நகர முடியாத அளவுக்கு நரக வேதனை தரும் திடீர்கடைகளை போலிசார் அகற்றுவார்களா? அவர்களுக்கு லஞ்சம் கொடுத்தே நம்மைக் கொல்லும் வியாபாரிகள் வேறு இடம் பெயர்ந்து போவார்களா? இதைக் கண்டும் காணாதவாறு இருக்கும் மாநகராட்சியினர் என்ன செய்யப் போகிறார்கள்.?

'ரீத்தா'

---

www.thamizham.net - Free E Books No TM 14721

டெலிபோன் எடுத்து மறுபடி ராஜ்பூர் ரோடுக்கு போன் செய்தான். பஞ்சாபியில் மறுபடி பேசினான்.

"டி.எல்.ஒ. 9954"

"ஆம்" நானும் தலையை ஆட்டினேன். கொஞ்ச நேரம் கவனித்தான். அவன் முகத்தில் மெதுவாக புன்சிரிப்பு சிரிப்பாகியது. டெலிபோனை வைத்து விட்டு என்னையே பார்த்தான். என் 'பான்' போட்டு சிவந்த உதடுகளைப் பார்த்தான்.

"புங் தோ நை காயா ஆப்னே?"

("லாகிரி வஸ்து ஏதும் சாப்பிடவில்லையே நீங்கள்!")

"ஏன்"

நீங்கள் கொடுத்த டி.எல்.ஒ. 9954 யார் நம்பர் தெரியுமா? உணவு மந்திரியின் ஜாயிண்ட் செக்ரட்ரியின் கார் நம்பர்!"

"டி.எல்.ஒ. 9945 என்று நினைக்கிறேன்" என்றேன் அசட்டுத்தனமாக

"9459, 4599, 5499 எவ்வளவு இருக்கிறது. ஃ என்று சிரித்தான். நான் மௌனமானேன்.

"பதட்டப்படாதீர்கள் எங்களுக்கு அந்த பெண்ணின் உறவினர்களிடமிருந்து நிச்சயம் புகார் வரும் உடனே நாங்கள் கவனிப்போம் எதற்கும் இதை வந்து எங்களிடம் சொன்னதற்கு வந்தனம்" என்று வாயிலைக் காண்பித்தான்.

எரிச்சலுடன், அவமானத்துடன் எழுந்து வந்தேன். அவன் சிரிப்பு என் முதுகைச் சுட்டது.

(பஸ் வந்தது அதில் ஏறிக் கொண்டு ஷிலா தியேட்டருக்கு டிக்கட் வாங்கினேம். மேல் கம்பியில் தொங்கிக் கொண்டு சத்யனிடம் அதன் பின் நான் செய்த காரியங்களை தொடர்ந்து சொன்னேன்.)

நான் விடுவதாக இல்லை. திரும்ப வந்ததும் அந்த பெண் வெளி வந்த அலுவலகத்துக்குச் சென்று விசாரித்தேன். அங்கே எத்தனை பெண்கள் வேலை செய்கிறார்கள், அவர்களில் யாராவது காணாமல் போய் விட்டார்களா என்று.

அவர்கள் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். எனக்குப் புரியவில்லை. மறு தினம் செய்தித் தாள்களில் அதைப்பற்றி ஒரு மூலையில் கூடச் செய்தி இல்லை. இந்த மாதிரிச் செய்திகளை சாதாரணமாக எட்டு இன்ச் கொட்டை எழுத்துக்களில் பொடுவார்களே! அதைப் பற்றி பேச்சே இல்லை.

எனக்கு என்மேலேயே சந்தேகம் ஏற்பட ஆரம்பித்தது நான் கண்ட காட்சி நிஜமா இல்லை, ஒரு வித அத்வைதியின் மாயமா? அது நிகழவே இல்லையா? அந்தப் பெண் காற்றா? அவளை வலிய இழுத்துக் காரில் தள்ளியவர்கள் பரிமாணமில்லாத மனச் சித்திரங்களா? என் நினைவு ரூபம் கொடுத்த படமா? ஒன்றும் புரியவில்லை?

(பஸ் சிவப்புவிளக்குக்குப் பணிந்து நின்று கொண்டிருந்தது)

(அ) நாகரீகம்!

அள்ளி முடியாத பரட்டைத்தலை கூந்தலுடன் அரையுடம்பு தெரியும்படி ஆடையும் கட்டிச் செல்கின்ற இக்கால மாணவியர்களின் நாகரீகம் என்ன நரகரீகமோ!

www.thamizham.net - Free E Books No TM 14721

**மாணவர்கள்...**

'தவறிப்போய் பள்ளிக்கோ கல்லூரிக்கோ சென்று விட்டால், வாத்தியாருக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து விட்டு வரும் வாத்தியாரின் வாத்தியார்கள்.'

—ஸ்கேம்

அப்புறம் மற்ெருரு காரியம் செய்தேன் ஹிந்துஸ்தான் டைம்ஸின் ஒரு ஞாயிறு இதழில் இந்த மாதிரி ஒரு விளம்பரம் கொடுத்தேன் :

"சென்ற ஜனவரி மாதம் 18ம் தேதி நடுப்பகல் 12-30 மணிக்கு ஸஃதர்ஜங் எனக்ளேவ் மூன்ருவது பிளாக் பலமாடிக் கட்டடங்கள் எதிரில் ஒரு பெண்ணை சில யுவர்கள் கடத்திக் செல்வதைப் பார்த்தவர் தயவு செய்து கீழ்க்கண்ட தபால் பெட்டி எண்ணுக்குத் தெரிவிக்கவும்,

எனக்கு நான் மட்டும் தான் அந்தக் காட்சியைப் பார்த்திருப்பேன் என்று நம்ப முடியவில்லை. மற்றவர்களும் தூரத்திலிருந்தோ, ஜன்னலிலிருந்தோ எதிரேயோ எங்கிருந்தோ நிச்சயம் பார்த்திருக்க வேண்டும். என்னதான் பொட்டயாக இருந்தாலும்... பார்த்த அவர்கள் என்னதான் செய்தார்கள் என்று அறிய ஆசை. மேலும் நான் கண்டது ஒரு காட்சி என்பதற்கு நிரூபணம் தேவையாக இருந்தது இரண்டு பேர் பார்த்து ஒத்துப் போனால் தான் ஒரு காட்சி சம்பவமாகிறது. அதற்குத்தான் அந்த விளம்பரத்தைக் கொடுத்தேன்.

(தியெட்டர் வாயிலில் வந்து இறங்கினேம். முன்னமேயே டிக்கட் வாங்கியிருந்ததால் அவசரப்படாமல் பேசிக் கொண்டே உள்ளே நுழைந்தோம்.)

அந்த விளம்பரத்துக்கு ஏதாவது பதில் வந்ததா?

"அது கொடுத்து நான்கு மாதம் ஆகிறது, நடுவில் ஒரு தடவை திரும்பவும் கொடுத்தேன். இதுவரை அதற்கு ஒரு பதிலும் கிடையாது. என்ன சொல்கிருய்?"

(இருளில் இரண்டு ஸீட்டின் மேல் டார்ச் ஒளி விழுந்தது தடவித்தடவி மன்னிப்பு நிறைய கேட்டுக் கொண்டு உட்கார்ந்தோம். நல்லவேளை மெயின் படம் ஆரம்பிக்கவில்லை. சென்ஸார் சர்டிபிகேட் காண்பித்துக் கொண்டிருந்தார்கள்)

"மற!" என்ருன் சத்யன் சிக்கனமாக

"படத்தை கவனி"

எழுத்து காட்டினர்கள், ஈஸ்ட்மன் கலரில் டைரக்டரின் பெயர் தயாரித்தவர் பெயர்... டில்லியில் எடுத்த படமாம்... படம் துவங்கியது.

ஒரு வாசலை விட்டு ஒரு பெண் வெளியே வருகிருள் உயரமான அழகான பெண். வளைய வேண்டிய இடத்தில் வளைந்த மேனி கோபால்ட் நீலத்தில் ஸாரி அணிந்திருந்தாள்.

அவளை திடீரென்று ஒருவன் நெருங்குகிருன். மணி கேட்கிருன் அதே சமயம் அவள் பக்கத்தில் ஒரு அம்பாஸடர் கார் வந்து நிற்கிறது அதிலிருந்து சிலர் வெளிப்படுகிருர்கள். மணி கேட்டவன் அவள் கரங்களைப் பிடிக்க மற்றவன் அவள் முகத்தில் ஒரு குத்துட்டையை...


இதே காட்சி! கோணம் தான் வேறு. பின்னலிருந்த வானிலிருந்து எடுக்கப்பட்ட கோணம்.

www.thamizham.net - Free E Books No TM 14721

Phone : 23105

Famou's & Foremost name Since 1915
use Always

LAW COLLEGE BRAND STEEL TRUNK'S & SUIT CASE'S
Whole Sale Retail Dealer's in
Cabins Suit Cases Tight Trunk etc. etc.



TRADE MARK

LAW COLLEGE BRAND

STEEL TRUNK WORKS

17, Baker Street, Madras-1

Branches :

337 & 342 Esplande

FOR BETTER

COMPLEXION

USE

REMY

SNOW & POWDERS

www.thamizham.net - Free E Books No TM 14721

# கேள்வி ஒன்று.... பதில் மூன்று

தெற்கு திட்டங்குளம்
பெ. ராமச்சந்திரன்.

1. கடல் பிரயாணம் செய்யும் போது இலட்ச ரூபாயும் தன் மனைவியும் கடலில் விழுந்து விட்டதாக வைத்துக் கொள்வோம் முதலில் மனைவியைக் காப்பாற்றுவதா? பணத்தை எடுப்பதா?

■ மனைவி கூட இருக்கும் போது உங்களிடம் முழுதாக ஏது இலட்ச ரூபாய்?

■ நியாயப்படி முதலில் எடுக்க வேண்டியது இலட்ச ரூபாயைத் தான் ஆனால் கடலில் விழுந்த பணத்தை எடுக்க முடியாது என்பதனல் மனைவியைக் காப்பாற்ற வேண்டியதுதான்

■ மனைவி அணிந்திருக்கும் பொருள்களின் மதிப்பைப் பொறுத்திருக்கிறது.

திருத்துறைபூண்டி சு. கோவிந்தராசன்

2 பல ஆண்டுகளாக ஊமையாக இருந்தவன் திடீரென்று பேசு ஆரம்பித்தால் அவன் முதலில் என்ன சொல்லுவான்?

■ "சரஸ்வதி சபதம்" பார்த்தீரா! முதலில் "அ" என்று தான் சொல்லுவான்.

■ நிச்சயமாக "அகர முதல எழுத்தெல்லாம்" பாட மாட்டான்.

■ "ஸ்கோர்" என்ன வென்று கேட்பான்.

கோயம்புத்தூர் K. S. கிருஷ்ணவேணி

3. Tube Light எனப் பெயரிடப் படுவது யாருக்கு?

■ எதையும் மிக மெதுவாக புரிந்து கொள்பவர்களுக்கு.

■ 100 ஐ ½ ஆல் வகுத்தால் எவ்வளவு என்பது உடனே தெரியா விட்டால் நீங்கள் ஒரு T.L.

■ நல்ல உதாரணம் காட்டலாம் ஆனால் எங்கள் பொறுப்பாசிரியர் ஒருவர் கோபித்துக் கொள்வார்.

---

சிறந்த கேள்வி முதல் கேள்வியே.
பரிசு: அகிலனின் 'சிநேகிதி' (ராணி முத்து வெளியீடு)

---

www.thamizham.net - Free E Books No TM 14721

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
கே. வீ. குமரவேல்

4. உழைக்காமல் ஊதாரித்தனமாக சுற்றிவரும் இளைஞர் பெருமக்களை எப்படி திருத்தலாம்?

விற்பனை பிரதிநிதி (Sales Rep-resentative) களாக போட்டால் நல்ல பயன் கிடைக்கும்.

அவர்கள் அப்படியே இருக்கட்டும் அப்படிப் பட்ட பெருமக்கள் பலர் இல்லாது போனால் வேலையில்லாத் திண்டாட்டம் இன்னும் பயங்கரமாகிவிடும்.

திருத்த வழி இருக்கிறது. திருந்தி விட்டால் அவர்களுக்கு ஒரு வழி இல்லாது போய்விடும்.

தூத்துக்குடி வி. நடராஜன்

5. உலகில் உள்ளது எது? இல்லாதது எது ?

வறுமை. செல்வம்

உள்ளது குறைகள் இல்லாதது நிறைகள்

உலகில் உள்ளது மனிதன், இல்லாதது மனிதத்தன்மை

ஈரோடு கோ. கி. நாகராசன்

6. வருங்கால சந்ததியினருக்கு வழி காட்டியாக அமைய இன்றைய நிலையில் ஒரு மாணவன் என்ன செய்ய வேண்டும் ?

சொல்கிறோம், செய்யத் தயாரா ?

செய்ய வேண்டியது ஒன்றுமில்லை செய்யாமலிருக்க வேண்டியதான் பல இருக்கின்றன. (உ-ம்) கல்லெறிதல், பஸ் கொளுத்துதல், ஹிப்பியாதல்...

மாணவன் - மாண்புள்ளவனாக இருக்க வேண்டும்.

சென்னை ஆ. சூரியப்பிரகாஷ்

7. உண்மையில் நாட்டைக் காப்பாற்றக் கூடியவர்கள் அரசியல் வாதிகளா, தேசிய வாதிகளா?

சந்தேகமில்லாகமல் தேசிய வாதிகள் தான் !

கோட்சே உயர்ந்தவனா காந்தி உயர்ந்தவரா என்று கேட்பது போலிருக்கிறது.

இரண்டு பேர்களும் அல்ல கடைசியில் இராணுவவீரர்களே நாட்டைக் காக்கிறார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
சீ. கண்ணன்

8. பரீட்சை எழுதும் மாணவர்கள் தான் ஒரே கேள்விக்கு பல விதமாக [ஆளுக்கொரு விதமாக] எழுதுவார்கள் நீங்கள் ஏன் ஒரே கேள்விக்கு மூன்று விதமான பதில் அளிக்க வேண்டும் ?

புதுமை !

ஆசிரியர் குழுவில் அதிகம் பேர் இருப்பதால் !

ப-தி-ல் மூன்றெழுத்தல்லவா?

திருவரங்கம் - குமார்

9 நாம் படிப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பதால் தான் நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டம். பெருகியதற்கே காரணமென்று சொல்கின்றேன் என் யூகம் சரிதானே ?

தப்பு

படிக்காமல் இருந்தால் மட்டும் வேலையில்லாத்திண்டாட்டம் நீங்கி விடுமா என்ன ?

www.thamizham.net - Free E Books No TM 14721

■ ஜப்பானில் இன்று 100% படித்தவர்கள் ! நீர் சொல்வது சரியானால் ஜப்பான் உலகத்திலேயே வேலையில்லாத் திண்டாட்டம் நிறைந்த நாடாக இருக்கவேண்டும்.

மதுரை. ர. சு. அலி

10 உலகத்தில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் காந்தியைப் போல அண்ணாவைப் போல, பாரதியைப் போல புகழுடைய ஆரம்பித்தால் என்னவாகும்.

■ புகழ்வதற்கு ஆள் இல்லாமல் போகும்

■ நடக்காத ஒன்றை ஏன் கற்பனை செய்து நேரத்தைப் போக்குறீர்

■ 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவர் வாக்கு உண்மையாகும்:

புன்னைக்காயல் வில்லியம்

11. அடே கழுதைகளா படிப்பதை விட்டு பத்திரிகை என்னடா நடத்துவது?

■ மரியாதை தேவை, உங்கள் அழுக்குகளை நாங்கள் தானே சுமக்க வேண்டியிருக்கிறது.

■ கழுதைகள் பத்திரிகையை தின்னுமே தவிர நடத்தாது.

■ படித்துக் கொண்டு தானே பத்திரிகை நடத்துகிறோம்.

சேலம் எம். மல்லீஸ்வரன்

12. அழகுக்கும் அறிவுக்கும் சம்பந்தம் இருப்பதில்லையே ஏன்?

■ இருக்கக் கூடாது என்பதனால்

■ சம்பந்தம் இருக்கிறதே பல அறிவுள்ள முகங்கள் சுடர் விட்டுப் பிரகாசிக்குமே.

■ அழகு தொடுவானம். அறிவு கடல், இரண்டுக்கும் எப்படி தொடர்பு இருக்க முடியும்.

வைணவக் கல்லூரி தண்டபாணி.

13. நிலவில் முதல் அடி வைத்த ஆம்ஸ்டிராங்கையும், தெய்வப் புலவர் தி[illegible]ணைத்துப் பதில் தர முடியுமா?

■ செயற்கரிய செய்தவர்கள்.

■ இரண்டு மாதங்களில் மக்கள் ஆம்ஸ்டிராங்கை மறந்து விட்டார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் மக்கள் வள்ளுவரை மறக்கவில்லை.

■ இருவரும் நோபல் பரிசு கிடைக்காத பெரியவர்கள்.

திருச்சி செல்லப்பன்

14. இந்தியாவை மக்களாட்சி முறை முன்னேற்றும் என்று நினைக்கிறீரா?

■ முன்னேற்றம் என்று நம்பிக்கையில் தான் மக்களாட்சி உருவானது ஆனால்......

■ இந்தியாவில் மக்கள் ஆட்சி பற்றி சர்ச்சில் வாக்கு பலித்துவிடும் போலிருக்கிறது.

■ நினைக்கவில்லை.

திருவனந்தபுரம் எஸ். எஸ். மணி

15. பொய் சொல்லாத புலவர்கள் யாராவது உண்டா?

■ பொய் சொன்னால் தானே அவன் புலவன்.

■ இல்லை.

■ உண்மையின் உயர்வு நவிற்சி அணிதான் பொய்யாகத் தோன்றுகிறது.

www.thamizham.net - Free E Books No TM 14721

* வாசக அன்பர்களே! நாங்கள் விளையாட்டாக அளிக்கும் பதில்களை நீங்களும் தயவு செய்து விளையாட்டாக எடுத்துக் கொள்ளுங்கள். யாரையும் புண்படுத்துவது எங்கள் நோக்கமல்ல.

கோவை T. K, சுப்ரமணியம்

16. கொடுக்கலும், வாங்கலும் நாட்டில் பெருகிவிட்டதே ஏன்?

தேவை பெருக்கத்தால்.

நீர் குறிப்பது......

உலக இயக்கமே அதுதானே.

சென்னை மு. ஆறுமுகம்

17. கான் அப்துல் அலி அஹமத் கபார்கான் — குறிப்பு தேவை.

அது யார் அரேபிய மந்திரவாதி!

நீங்கள் கேட்க விரும்புவது எல்லை காந்தி கான் அப்துல் கபார் கானைப் பற்றி என்று நினைக்கிறேன்

லாட்டரி டிக்கட்டுகள் வாங்காமலேயே லட்சாதிபதியாகிக் கொண்டிருக்கும் நல்லவர்.

திருச்சி தேசியக்கல்லூரி கணபதி

18 பூச்செண்டு வர வர கீழே போய்க் கொண்டிருக்கிறதே ஏன்?

பளு தாங்க முடியாமல் தான்.

புலி பதுங்குவது பாய்வதற்கே

தடுப்பதற்கு உங்களை போன்ற கரங்கள் தேவை.

பரங்கிமலை ரெத்தினம்

19. நடிகை மனோரமாவைப் பற்றி தங்கள் கருத்து?

வேறு ஏதாவது பயனுள்ள கேள்வி கேட்கக் கூடாதா? எத்தனை முறை கூறுவது.

பூச்செண்டிற்கு நன்கொடை தருவதாக ரசீது புத்தகத்தில் கையெழுத்திட்டார்கள் இன்று வரை பல முயற்சிகளுக்குப்பின்னும் பணம் வரவில்லை.

ஒரு "நகைச்சுவை நடிகை"

சென்னை சித்தரஞ்சன்

20 தமிழர் சமூகத்தைப் பொறுத்தவரை என்ன சீர்திருத்தம் வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?

எழுதினால் ஏட்டிலடங்காது

இந்தியாவின் பிற சமூகத்தைப் பார்த்து தமிழர் சமூகம் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கின்றன.

தமிழன் நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது வல்லவனாகவும் இருக்க வேண்டும்.

* மகளிர் மூவரின் பதில் இல்லையென்று பார்க்கிறீர்களா? 35 வது பக்கத்திற்கு வாருங்கள்.

www.thamizham.net - Free E Books No TM 14721

# அரசினர் கவனத்திற்கு

## சென்னையில் 'பஸ்'களுக்காக மக்கள்!

### இந்நிலை மாறவே மாறாதா!

எத்தனையோ ஆண்டுகளாய் பல்வேறு மக்கள் பத்திரிகைகளிலும் தனிப்பட்ட முறையிலும் தமிழ்நாடு அரசு போக்கு வரத்து கண்டக்டர்-டிரைவர்களின் போக்கைக் கண்டித்தும், எந்தவித மாற்றமும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக அவர்களது மரியாதைக்குறைவான நடத்தையும், மனிதத் தன்மையற்ற போக்கும் நாளுக்கு நாள் வளர்ந்து வருவதாக பொது மக்கள் சென்னை யெங்கும் உணர்ந்து வேதனைப் படுகிறார்கள்.

முற்றிலும் நாகரீகமற்ற பேச்சு, வேணுமென்றே மக்கள் ஏறவரும் போது விசிலடித்தல், கடமையற்ற முறையில் பாதசாரிகள் மேல் மோதுவதுபோல ஓட்டுதல் [வேககட்டுப்பாடு [speed rest iction] இவர்களுக்கு மட்டும் கிடையாது போலிருக்கிறது] மழைக்காலங்களில் பாதசாரிகளில் மீது தண்ணீரைவாரி அடித்துச் செல்லுதல் ஒரு இன்பமாகக் கொள்ளுதல் இது போன்றவை சென்னை மக்களுக்கு வழக்கமான நிகழ்ச்சிகளாகி விட்டிருக்கலாம் ஆனால் வெளியூரிலிருந்து வருபவர்கள் இந்நிலை கண்டு மிக்கவேதனைமாக இதனை மதிப்பிடுகின்றனர் இதனை கண்டிக்க ஆளே இல்லையா என்று கேட்கின்றனர்:

சுருக்கமாகச் சொல்லப் போனால் சென்னையில் மக்களுக்காக பஸ்கள் இல்லை, பஸ்களுக்காக மக்கள்!

கண்டக்டர்கள் டிரைவர்களைக்குறை சொல்வதைவிட நிர்வாகத்தையே நாம் இதற்கெல்லாம் காரணம் என்று சொல்ல வேண்டும்

அரசு எத்தனை காலத்திற்கு இதனை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கப் போகின்றது?

அரசு கவனத்திற்கு கொண்டு வருபவர்

**திரு. எழில்வளவன்**

சென்னை பச்சையப்பன் கல்லூரி

## எங்களுக்கும் பங்குவேண்டும்!!

## குறைகள் நீங்க வேண்டும்

இன்றைய உலகில் இளைஞர்கள் பங்கேறகாத இடமே இல்லை என்ற மிகவும் உணரப்பட்ட ஒன்று மேலை நாடுகளில் எல்லாம் ஒவ்வொரு துறையிலும் பங்கேறபவர்களில் மிகப்பலர் இளைஞர்களே அதிலும் கல்லூரி மாணவர்கள். எங்கும் எதிலும் போராட்டங்களும் கதவடைப் புக்களும் நடப்பதின் அடிப்படைக் காரணமே இளைஞர்களுக்கு நிர்வாகத்தில் சரியான தேவையான இடமளிக் காமையே இளைஞர்களை வாயளவில் ஒவ்வொரு முன்னேற்றச்செயலுக்கும்அழைத்து

www.thamizham.net - Free E Books No TM 14721

விட்டு சரியான பங்கை அளிக்காமை முன்னேற வேண்டிய பாரத்தை மிகவும் பின்னேக்கித் தள்ளுவதாகின்றது.

குறிப்பாக, கல்வித் துறைகளில் மிகவும் வயதைக் கடந்தோர், உழைத்துழைத்து ஊக்கமிழந்தோரே மேலிடங்களின் பெறுப்பை வகிப்பது, மாறிவரும் உலகில் மாறுத பழம் எண்ணங்களைத் திணித்தல் மிகவும் களைய வேண்டிய தலையாய ஒன்று.

அண்மையில் கேரளப் பல்கலைக் கழக 'சிண்டிகேட்'டில் மாணவர் இருவர் பங்கேற்றல் பாரதத்தில் கல்வித் துறையில் ஏற்பட்ட மாபெரும் புது முயற்சி அல்லது புரட்சி இதைக்காணும் போது சாக்ரடீஸ் கேள்வி ஞானம் நம்மைத் தூண்டத் தான் செய்கிறது. ஏன் மற்ற பல்கலைக் கழகங்களிலும் மாணவர் இன்னும் பெறுப்பான பங்கை அளிக்கப்படலாகாது? பாரத்தைச் சுமக்கும் தொழிலாளிக்குத் தானே தான் எவ்வளவு சுமக்க இயலும் எ பது தெரியும்.

எனவே தான் புரட்சித் திட்டம், புதிய மாற்றம் என்று எதைஎதையோ கூறி வரும் அரசு இதைச் செயல்படுத்தின் மாணவர்களின் பங்கைச் சரியான பாதைக்கு இட்டுச் செல்ல இயலும் நாமும் முன்னேற நாடும் சிறப்படையும்.

ஆளுனர் கவனத்திற்கு சுட்டிக் காட்டுபவர்

**நீதிவேந்தன்**

திருச்சி தேசியக் கல்லூரி.

## உரமும் தரமும்!

'ஏரினும் நன்றுதல் எருவிடுதல்' என்ற குறள் மொழியை முழுக்க முழுக்க வுணர்ந்து நடுவரசும், மாநில அரசும் நாடெங்கிலும் பரவலாக இரசாயன உரத் தொழிற்சாலைகள் அமைத்து உர உற்பத்தி செய்து, விவசாயத்தில் நல்ல பயிற்வளர்ச்சிக்கு உதவிவருவது பாராட்டத் தக்கதே அதே நேரத்தில் தனி நபரும் உரங்கள் உற்பத்தி செய்து வெளிவரும் உரங்கள் தரமானவையா என்பதை முதலில் ஆராய வேண்டும். பெரும்பாலும் அவைகள் தரங்கெட்டவைகளே. எங்களுடைய நிலத்தில் பயிர்களுக்கு உரமிட வாங்கி வந்திருந்த உரத்தில் இடிந்து போன பழைய காரை (சுண்ணும்பு மணல் கலவை) சாம்பல் சோற்று உப்பு ஆகியன காணப்பட்டன. இது போன்று உரங்களை வயலில் இடுவதால் பூங்காவும் பொட்டலாகி விடும். எனவே உணவு உற்பத்தியில் ஆர்வங்காட்டிவரும் அரசு இவ்வுரவிசயத்தில் கவனம் செலுத்த வேண்டும் உரஆராய்ச்சி நிபுணர்களைக் கொண்டு ஒவ்வொரு உரக் கம்பெனியிலும் சென்று சோதனையிட வேண்டும் விளைவைக் கெடுக்கும் பொருள்களைச் சேர்த்திருக்கும் உரக் கம்பெனிகளின் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் இரண்டாவதாக உரம் வாங்கி விற்பனை செய்வோர்களையும் சோதனை செய்ய வேண்டும். ஏனென்றால் கம்பெனியிலிருந்து வரும் நல்ல உரத்தில் உப்பு, சாம்பல் முதலானவற்றை சேர்த்து கலந்து இன்னும் இரண்டு மூன்று மூட்டைகள் அதிகமாகச் செய்து விற்று விடுகிறார்கள். எனவே அரசினர் உணவு உற்பத்தியை பெருக்குவதில் தீவிரமாக முனையுங்கால் மேற்கூறிய தரங்கெட்ட உரங்களால் விளைநிலங்கள் கேடடையும் தன்மையை அறிந்து அதற்கான நடவடிக்கைகளை விரைவில் எடுப்பார்களாக!

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்!

(அரசு கவனத்திற்கு கொண்டு வருபவர்)

**க. செல்லப்பன்.**

திருச்சி ஜோசையப்பர் கல்லூரி.

www.thamizham.net - Free E Books No TM 14721

தமிழ் வளர்ப்பதாய், காட்டி தான் வாழும்
அரசியல் எத்தர்களின்

# முகத்திரைகள் கிழிக்கின்ற இளந்தமிழா! இனியதோழா!

என்கிறார் இரத்தின கணேசன் புலவர் இடைநிலை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

பொருங்கருவி யெனக் கவிதை வெள்ளம் பாயும்
உள்ளங்கள் பலகோடி ஒய்ந்துப் போச்சு
யாங்ஙனமோ? யென நண்பர் கேட்கலாகும்
உரைக்கின்றேன கோள்தோழ, தமிழகத்தில்
ஆங்கிலத்தில் சில சொற்கள் அள்ளிப்போட்டு
அகற்கேற்ப மேளுட்டு இசையைச் சேர்த்து
செங்கரும்பின் சுவைமிக்க கவிதை யென்பான்
செந்தமிழ் கத்துள்ளோர் ஆமென்பாரே!

அகரமுத லாகவர நான்கு சொற்கள்
அடுக்காக அமைக்கின்ற அழகு பேச்சன்
அகவற்பா இஃதென்பான் அதற்கு மிங்கே
ஆமென்று புகழ் பாடும் புலவர் கூட்டம்
திகழ்கின்ற தமிழகத்தில் புதிய தான
சுவைமிக்க ஒளிமிக்க கவிதை யாகும்
அகமுடைய நற்கவிஞன் எழுந்து நிற்கும்
ஆற்றலதை யாங்ஙனமே பெறுவதாமோ!

தனித்தமிழின் மணம் கெட்டுப் போனதந் நாள்
சமக்கிருதம் முதலான மொழி கலந்து
இனிப்பான தமிழ் சொற்கள் மறைந்த தாளுல்
தனித்தமிழை உயிர்ப்பிக்க உறுதி கொண்டு
முனைப்போடு நின்ற தமிழ் அறிஞர் இங்கே
மறை மலையும் பரிதிமாலும் திருவிகாவும்
போன பின்னர் புரட்சிக்கவிதான் வந்தான்
புரட்சியவன் போனனே பின்னர் யாரே!

அரசியலான் தமிழென்பான் ஆர்ப்பரிப்பான்
ஆட்சிக்கு வரும் வரையில் அந்த மோகம்
பிறனுழைப் பால் பொருள் சேர்ப்பான் மறைக்க வெண்ணி
புதுப் பணிகள் தமிழுக்கே செய்வதாக
உரைத்திடுவான், பொய்யுரைக்கும் சமயவாதி
உணரீரோ தமிழ்ப் பொருமை என்பான் இந்த
கறைபட்ட அரசியலின் முகத்திரைகள்
கிழிக்கின்ற இளந்தமிழா இனிய தோழா!

www.thamizham.net - Free E Books No TM 14721



என் அருமை மாணவ
நண்பர்களே உங்களுக்
கோர் அறிவிப்பும்
எச்சரிக்கையும்



Dr. S. R. சிவராஜ் R.I.M.P.

Dr. R. S. சிவகுமார் R.I.M.P.

சோர்வடைந்த வாழ்க்கை–வளம்பெற்றுப்பொங்கும் இன்பம்





வாழ்க்கையில் பாதிக்கப்பட்ட உங்களின், சகலவிதமான குறைகளுக்கும் விளக்கம், ஆலோசனை வேண்டுபவர் கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்க-

சிவராஜ் சித்தவைத்யசாலை, சிவதாபுரம். S.O. சேலம், Phone: 5742.


www.thamizham.net - Free E Books No TM 14721

இனிமேல்

# டிக்கெட் இல்லாமல் பயணம் செய்ய 14 வசதிகள் கிடையாது




இது பட்டாபிராம் இரயில்வே ஸ்டேஷன்

டிருந்த சூப்ரெண்ட் டண்ட் ஆப் இரயில்வே அதிகாரி திரு தாமஸ் அவர்களின் உரையாடலே, எங்களுக்கு ஒரு புதிய ஸ்டேஷன் உடனே உருவாகி விட்டது போல் புதுத்தென்பை அளித்தது.

சென்ற இதழ் கட்டுரையின் எதிரொலியாக நாங்கள் இரயில்வே நிர்வாகத்தினரை சந்திக்க சென்றிருந்தபோது, திரு மேனன் அவர்கள், சூப்ரெண்ட் ஆப் இரயில்வே

"உங்களது ஆர்வத்தை பாராட்டுகிறோம், இதுநாள் வரையில் என் கவனத்திற்கு இது கொண்டுவரப்படாமைக்கு மிகவும் வருந்துகிறேன். இதற்கு முடிவு வெகு சீக்கிரத்தில் காண்போம். உங்கள் விருப்பம் என்ன? உங்களுக்கு வழி ஏதாவது தென்படுகிறதா?

அமைதியான நடையில் ஆர்வத்தோடு எங்களைக் கேட்டுக் கொண்



இது ஸ்டேஷன் இல்லாத ஸ்டேஷன்

**வில்லியம் பர்ஞண்டஸ்**
பொறுப்பாசிரியர்

www.thamizham.net - Free E Books No TM 14721

திரு. தாமஸை சந்திக்க ஏற்பாடு செய்தார்.


முகத்தில் முறுவலுடன் எங்கள் குறைகளை ஆர்வமுடன் கேட்டறிந்து, எங்களையும் ஊக்குவித்த அவர், இரயில்வே நிர்வாகத்தின் குறைகளையும் மறைக்கவில்லை.

"இந்தப் பிரச்சனை, அதாவது சென்னையில் இருந்து பட்டாபிராம் வழியாகச் செல்லும் 7 வண்டிகளும், பட்டாபிராம் சைடிங்கில் இருந்து சென்னை வரும் 7 வண்டிகளும் பட்டாபிராமில் நிற்க, டிக்கெட் கொடுக்கச் செய்ய, நடவடிக்கை எடுப்பதன் மூலம் அங்கு ஒரு புது ஸ்டேஷனை உருவாக இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். இன்னும் சில நாட்களில் இந்த 14வண்டிகளிலும் சென்சஸ் எடுக்கப்படும். பின் பொறியியற் வல்லுனர்களால் இடம் தேர்ந்தெடுக்கப் பட்டு பிளாட்பாரம் கட்டப்படும்" என்றார் திரு. தாமஸ்.

கமர்சியல் சூப்பிரெண்டெண்ட் திரு. கோசியைச் சந்தித்து நமது பத்திரிகையின் குற்றச் சாட்டை விளக்கிக் கூறினோம்.

எங்களைக் கண்ட அவர்.

"மாணவர்களே ஓர் சமுதாயப் பிரச்சனைகளாக இருக்கும் போது இப்படி இரயில்வே நிர்வாகத்தில் ஒரு புது பிரச்சனையை உருவாக்கி நம் முன் வந்து நிற்கிறீர்களே என்ற தயக்கத்துடன், அவரது அறைக்கு அழைத்துச் சென்றார்.



பிளாட்பாரம்?

குறைகளைச் சொன்னோம். சற்று பொறுமையின்றிக் கேட்டார். நீங்கள் இதை கவனியாது போனால், நாங்கள் வந்ததற்காகச் சமாதானம் கூறி, பின் இவைகளைப் பற்றி நடவடிக்கை எடுக்காமல் போனால் இரயில்வே மந்திரியின் கவனத்திற்கு கொண்டு செல்ல நேரிடும், என்று நாங்கள் விளக்கியதற்கு,

அவர் நிலைமையை, விளக்கியும் நடவடிக்கை எடுப்பதற்கு உடனடியாக ஆவன செய்வதாகவும் வாக்குறுதி அளித்து ஒரு வேண்டுகோளும் விடுத்தார்.

பெரும்பாலும் இந்த 14 வண்டிகளும் பட்டாபிராமில் உள்ள கலவலக்கண்ணன், இந்து கல்லூரி மாணவர்களால்தான் அடிக்கடி அனுவசியமாக நிறுத்தப் படுகிறது.



இறங்கத் தவிக்கும் கன்னியர்கள்

என்றும் இம் மாணவர்கள் முதல்வர் மூலம் இந்த வண்டிகளை முறைப்படி நிறுத்த இரயில்வேயைக் கேட்டால் அதற்குதகுந்த வழி செய்யப்படும் என்றும்,

மாணவர்களும் பொதுமக்களும் இதற்கு ஒத்துழைப்பார்களா? என்று எங்களிடமே கேட்டார்?

நாங்கள் உங்களைக் கேட்கிறோம்?

புகைப்படங்கள் :

திரு. யோகானந்த்.

---

(28 ம் பக்கத்தின் தொடர்ச்சி—மகளிர் மூவரின் பதில்கள்)

திருச்சி ப. கோதைநாயகி

மாணவ, மாணவியர் ஒழுக்க நெறிதவறி நடப்பதற்கு தற்கால ஆபாச திரைப்படங்கள் தான் காரணம் என்கிறேன். அவர்களை திருத்த உங்கள் யோசனை யாது?

* உண்மை! இம்மாதிரி ஆபாசப்படங்களைப் பார்ப்பதால் மாணவர்களின் ரசனையே கீழ்த்தரமாகி விடுகிறது. திரைப் படங்களினால் கெடுவது 98% மாணவர்கள் தான். 2% மட்டுமே மாணவிகள். ஆயினும் இந்த 2% மாணவிகள் நல்ல மாணவர்களையும் கெட்டு போகத் தூண்டுகின்றனர். மாணவர்கள் நல்ல படங்களை மட்டுமே பார்க்க வேண்டும்.

—வான்மதி

* மேலே குறிப்பிட்டவை தான் மூலகாரணிகள் என்று முற்றிலும் கூற இயலாதெனினும், காற்றும் ஓடத்தை திசைமாறச் செய்வதுபோல உபகாரணிகளாக நடுமாடுகின்றன. நாகரிகயுகத்தில் அதை அறவே ஒழித்து விடுவதும் இயலாத ஒன்றுதான் எனவே "அல்லவை நீக்கி தூயவை கொள்ளவும்.

—ஆனந்தி

* முற்றிலும் உண்மை. அவர்களைத்திருத்த, திரைப்படங்களை அறவே ஒழிக்க வேண்டியது தான்.

—அருணா

www.thamizham.net - Free E Books No TM 14721

## செய்திகள் வாசிப்பது

# பூச்செண்டு வானொலி நிலையம்

* வரியே முற்றிலும் இல்லாத ஓர் இடம் இந்தியாவில் இருக்கிறது. நம்ப முடியவில்லையா? நம் நாட்டைச் சேர்ந்த லட்சத்தீவுகளில் யாரும் வரி கட்டுவதில்லையாம்.
(ஆர். மாதையன்)

* உலகம் முழுவதும் பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் ஒரு மாதம் செய்தி வருவதற்காக 2,500 கோடி டாலர்களை, அப்போலோ திட்டங்களுக்கு அமெரிக்கா செலவிடுவது மிகவும் நியாயமற்ற காரியம் என்று பற்பல அமெரிக்க விமர்சகர்கள் குறை கூறுகிறார்கள்.
(சோவியத்)

* லண்டனின், பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ள மொத்த புத்தகங்கள் 80 கோடி. இதைத் தவிர ஆண்டு தோறும் 50 ஆயிரம் புதிய நூல்கள் வாங்குகிறார்களாம். இந்த புத்தக அலமாரிகளை ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்தினால் 190 மைல் இருக்குமாம்.
(பெரியபுலியூர் நமச்சிவாயக் குட்டியப்பன்)

* பூமிக்கு மிக அருகில் உள்ள விண்மீனுக்கு ஒளி செல்லும் வேகத்தில் (விநாடிக்கு 1,86,281 மைல்) ஒரு விண்கலம் பயணம் செய்தால்கூட திரும்பி வர 8 ஆண்டுகள் ஆகும். இந்நிலையில் விண்வெளி முழுவதும் மனிதன் ஆட்சி செலுத்துவது எந்த விதத்திலும் முடியாத காரியம் என்று நம்பப்படுகின்றது.

* உலகம் முழுவதும் மாறுத அமைப்பைக் கொண்ட காலண்டர் முறையை உருவாக்கப்போகிறார்கள். கிழமையும், தேதியும் எல்லா மாதத்திலும், எல்லா வருஷத்திலும் ஒரே மாதிரி இருக்கும். ஒரு மாதத்திற்கு 28 நாட்கள், 4 வாரங்கள்; ஆண்டுக்கு மொத்தம் 13 மாதங்கள். 13×28=364. மீதி ஒரு நாள் அனைத்துலக விடுமுறை நாளாக்கப்படும்.

* இந்திரா காந்திக்காக டெல்லியில் புதிய மாளிகை ஒன்று ஒரு கோடி ரூபாய் செலவில் எழுப்பப் படப்போகிறது. இதனை 'பிளான்' போடுவதற்கு வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட பொறியியல் வல்லுனருக்கு ஒரு லட்சம் ரூபாய் 'பீஸ்' மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது.

* சென்னை இலயோலா கல்லூரியில் "பெட்ரம் ஹால்" என்ற மன்றம் இருக்கிறது. இதன் மேலே தேர்வு எழுதுவதற்கு பெரிய கூடமும் மேடையும், கீழே நீண்டதோர் நூலகமும் இருக்கிறது. மாணவர்களிடம் வசூலித்த அபராதத் தொகையை வைத்தே, இப்பெரிய கட்டிடத்தைக் கட்டியதாகக் கூறுகிறார்கள்

—[ஆசிரியர் குழு]

www.thamizham.net - Free E Books No TM 14721

பரிசு : இலவச ஆண்டு சந்தா

# "தமிழகத்தில் மீண்டும் மூவேந்தர்கள் ஆட்சி ஏற்பட்டால்"

இருபத்தைந்து விழுக்காடு கூட எழுதப்படிக்கத் தெரியாத இந்த நாட்டில், கல்வி அறிவற்ற ஒழுக்க மற்ற பெரும்பாலோரால் தேர்ந் தெடுக்கப்படும் அரசியல் வாதிகள் எப்படி அறிவாற்றல் மிக்க நல்ல வர்களாக இருக்க முடியும்? அரசிய லில் நெஞ்சு பொறுக்க முடியாத அளவுக்கு ஊழல். எங்கும் குழப் பம். இதன் விளைவாக மக்கள் மூவேந்தர்களின் செங்கோண்மை யின் கீழ் சிறப்புற வாழ்ந்து வந்த பழைய நாட்களை நினைத்துப் பார்க் கின்றனர். நீதிக்காக உயிரை யும் ஈந்த மன்னர்கள் வாழ்ந்த இந்த நாட்டில், உணவிற் காக எதனையும் செய்யும் அரசியல் எத்தர்களின் நிலைகண்டு அறிஞர் சமுதாயம் ஆழ்ந்து சிந்திக்கின்றது. விளைவு: ஒழுக்கமற்ற ஜனநாயக ஆட்சியை விட மக்கள் நலம் பேணும் மூவேந்தரின் ஆட்சியே சிறந்ததென முடிவாகின்றது.

தமிழகம் சேர,சோழ, பாண்டிய நாடுகளாகப் பிரிக்கப்படுகின்றது, கல்வியாலும், ஒழுக்கத்தாலும், உயர்ந்த மூன்று தன்னிகரற்ற தன்னலமற்ற தலைவர்கள் இம் மூன்று நாட்டிலும் அரசியல் பீடத்தில் அமர்த்தப்படுகின்றனர். நீண்ட நெடுங்காலமாய், தமிழன் கனவுகளாகக் கண்டு வந்த அந்தப் பழந்தமிழ் வாழ்க்கை, அரசியல் முறை மீண்டும் மலர்ந்து விட்டது கண்டு ஒவ்வொரு தமிழ் நெஞ்சத் திலும் புத்துணர்ச்சி! ஊரெங்கும் திருவிழாக்கள்! வீடெங்கும் விருந்துகள்! பழந்தமிழ் பண்பாடு கள் மன்னர்களது நெஞ்சத்தில் இருந்தாலும், காலத்துக்கு ஏற்ற வாறு நடை, உடை, பாவனை மாறு கிறது.

தமிழ் கூறும் நல்லுலகாக வடக்கே வேங்கடமும் தெற்கே குமரிமுனையும், வங்க விரி கடலும், ஆனால் இல்லையே? தமிழகத்தின் ஒரு பெரும்பகுதியான சேர நாட் டில் இன்று தமிழ் இல்லை. தமிழர் வாழ்வு இல்லை என்றகாரணத்தால் அந்தபழைய எல்லை[illegible]யிலலை எனவே, சேலம்,கோவை, தர்மபுரி, நீலகிரி ஆகிய மாவட்டங்கள் சேர னுக்கும், வட ஆற்காடு,தென் ஆற் காடு,தஞ்சை,திருச்சி ஆகிய மாவட்

பரிசு பெறுபவர் : திரு. தமிழ்வேல்

ஆதித்தனார் அறிவியல் கலைக்கல்லூரி,
திருச்செந்தூர்.

www.thamizham.net - Free E Books No TM 14721

ங்கள் சோழனுக்கும், மதுரை. இராமநாதபுரம், திருநெல்வேலி, ன்யாகுமரி ஆகிய மாவட்டங்கள் ாண்டியனுக்கும் பிரித்து கொடுக்கப்படுகின்றன. பெயரள வில் நாடுகள் ஒன்றாயினும், மூன்று ாநிலங்கள் போலவே அவை செயல்பட்டு ஒரு கூட்டாட்சியாக அமைகின்றன.

அளவுக்கு மீறிய மக்கள் நெருக் த்தாலும், தூய்மையற்ற ாழ்க்கையாலும் நரகமாகிக் கொண்டிருக்கும் சென்னையை சாழன் ஒரு பெரும் துறைமுக, ணிக நகரமாக வைத்துக் காண்டு, பொன்னி நதி கொஞ்சி ிளையாடும் திருச்சி மாநகரை அடுத்த சிற்றூர்களை சேர்த்து நடுத் மிழகத்தில் ஒரு மாபெரும் தலை கரை எழுப்புகின்றான், வில்லும், லியும், கயலும் வாழ்புகழ் மூவ ன் இலட்சினையாகத் திகழ்கின் னை.

ஆட்சி மொழி, கல்வி மொழி இரண்டும் முற்றிலும் தமிழிலும் இருக்கின்றன் என்ற நிலையில் தமி கம் தனது இரண்டாவது பொற் ாலத்தைக் காண்கிறது. போர்க ான்ற, குழப்பமற்ற ஒரு நவநாக க மனித சமுதாயத்தைஉருவாக்கு தே தங்கள் வாழ்வின் குறிக் காளாகக் கொண்டுள்ள மூவேந் ர் ஆட்சியில் போருக்கு வழி ஏது? ற நாட்டினரும் போர் செய்ய னைக்க முடியாதவாறு அறிவியல் அறிவு இந் நாட்டில் வளர்ந்துள் ளது.

சோழ நாட்டிலே சென்னைப் ல்கலைக் கழகமும், பாண்டி நாட் டிலே மதுரைப் பல்கலைக் கழகமும், சேர நாட்டிலே கோவைப் பல்கலைக் கழகமும் மிகப் பெறும் அறிவுச் சுடர்களாக வளர்கின்றன. தமிழகத்தில் பிறக்கும் ஒவ்வொரு மனித உயிரும் கட்டாயம் பள்ளியிறுதி வரை கற்கவேண்டும் என்பது சட்டமாகையால், கல்லாதோர் இந் நன்னாட்டில் இல்லை. கல்வி என் அறிவிற்காகவே என்ற கொள்கை வலியுறுத்தப் பட்டு விட்டதால், வயிற்றுப் பிழைப்புக்காக கல்வி கற்றோரை காண முடிவதில்லை. தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற வகையில் மட்டுமே அலுவல்கள் கொடுக்கப்படுகின்றன. இலஞ்சம் கொடுத்தல், சிபாரிசு செய்தல் போன்றவை வரலாற்றுப் பாடங்களாகி விட்டன. தப்பித் தவறி இவ்வாறு செய்ய முற்படுவோர் பைத்தியங்களாக எள்ளி நகையாடப்பட்டு மனநிலை மருத்துவ மனையில் சேர்க்கப்படுவர்,

உழுதுண்டு வாழ்வோரே உயர்ந்தோர் என்ற திட்டத்தைக்கொண்டு வந்த மூவேந்தர்கள் உணவுப் பெருக்கத்தை அளவுக்கு மீறி வளர்த்து விட்ட நிலையில் பொது உணவான அரிசி இலவசமாகவும், பிற விளை பொருட்கள் மிகக் குறைந்த விலையிலும் கொடுக்கு மளவுக்கு பொருளாதாரம் உயர்ந்துள்ளது. அண்டைய ஏழை நாடுகளுக்கு இலவசமாக உணவுப் பொருட்கள் அனுப்பு மளவுக்கு உலகத்தின் ஒரு தலைசிறந்த வல்லரசாகும் உயர்ச்சி பாடுபட்டு உழைத்து முன்னுக்கு வந்த தமிழகத்திற்கு கிடைத்தது. இவையெல்லாம் மூவேந்தர்களின் திறமை மிக்க அறிவாற்றல் மிக்க ஒழுக்க மிக்க தலைமையின் கீழ்தான்!

www.thamizham.net - Free E Books No TM 14721

அமெரிக்காவுடன் போட்டியிடு மளவுக்கு மேல் சேரன் சேலத்திலே ஒரு பெரிய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை அமைத்து வியாழன், வெள்ளி ஆகிய கோள்களுக்கு செல்லும் முன்னேற்றத்தில் அறிவியல் நுட்பம் அறிந்திருந்தான். 1980-க்குள் வியாழனில் ஒரு தமிழனை இறக்கும் முயற்சிகளுக்காக அல்லும் பகலும் விஞ்ஞானிகள் பாடு பட்டு வந்தனர். நெல்லையிலே அணு ஆராய்ச்சிக்காக மிகப் பெரிய நிலையம் நிறுவி அமைதியான முறையில் அணுவைப் பயன்படுத்தும் சாதனங்களை உலகுக்கு அறிமுகப் படுத்தி உலக நாடுகளை வியப்பில் ஆழ்த்தி வந்தான் பாண்டியன். தஞ்சையிலே சோழன் உணவ ராய்ச்சிக்கழகம் நிறுவி உலகத்தின் வறுமையை நீக்க எல்லா வகையிலும் முயற்சிகள் செய்து வந்தான். தமிழகத்தில் குடிசைகள் இல்லை. மூன்று வேளை சாப்பிடாத மனிதர்கள் இல்லை. விமானத்தில் பயணம் செய்யாதோர் இல்லை. வீட்டுக்கொரு பலநிற தொலை காட்சி, இல்லத்துக் கொரு கார், பொருள் பெருக்கத்தால் ஒழுக்கக் கேடுகள் அமெரிக்காவைப் போல நிகழா வண்ணம் ஆன்மீகப் பெருக்கத்தை அறிஞர்கள் கூடவே தீவிரமாக வளர்த்தனர். இதனால் மகிழ்ச்சியான வாழ்க்கை ஒவ்வொரு தமிழனுக்கும் கிட்டியதோடு மட்டுமல்ல, உலகத்தின் பார்வையே இந்த கீழ் திசை தமிழகத்தை நோக்கித் திரும்பி இருந்தது.

நான் கனவு காண்கிறேன். ஆழ் நினைவில் இருந்து கொண்டு விழி மூடாமல் நான் காணும் விசித்திர கனவு இது.

ஆனால் அவை நிறைவேறவே முடியாது என்று அறிவு சொல்லுகிறது. உடனே என் உணர்வு விழித்துக்கொண்டு நான் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தப் பாழ் பட்ட தமிழகத்தை நினைவுறுத்தும் போது என் விழியோரத்திலிருந்து வேதனையாக இரு சொட்டுநீர் விழுவதைத் தடுக்க முடியவில்லை.

---

## தமிழ்ப் பற்றுளர்களே !

மாணவ நண்பர்களே! வீழ்ச்சியுற்றிருந்த தமிழகம் எழுச்சியை நோக்க, நமை ஈன்ற நற்றமிழ் நலம் பெற, நாம் ஒன்றுபட வேண்டும். "பேச்சிலும், எழுத்திலும் தனித்தமிழ்" கமழச் செயல்பட வேண்டும். இத் தன்மைக்காக நாங்கள் "தமிழியக்கப் பாசறை" தொடங்கி யுள்ளோம். தமிழ்ப் பற்றுள்ள மாணவ அன்பர்கள் ஆங்காங்கே 'தமிழியக்கப் பாசறை தொடங்க அன்புடன் வேண்டுகிறோம்,

தொடர்பு கொள்ள—
தமிழியக்கப்பாசறை
41, உமையாள் வீதி
காரைக்குடி-௩

www.thamizham.net - Free E Books No TM 14721

BOUQUET
FOR
OUTSTANDIG
EXPORT
PERFORMANCE :

# INDIA LEATHER BAGS A
## GOVERNMENT OF INDIA AWARD

The India Leather Corporation Private Ltd. are taking mighty leaps in the export leather, skins and hides. Their achievements in this direction were long age recognised by the Government of India and they were declared an " EXPORT HOUSE ". Not rssting content on the laurels obtained " INDIA LEATHER " exported during 1968 goods Million. And they are now the happy rccipients of an award by the Government of India for OUTSTANDING EXPORT PERFORMANCE from October 1966 to March 1968.

The India Leather Corporation Private Lte. rededicale themselves for unceasin export endeavours towards establishing abroad the trade image of India and earning valuable fore exchange for the country.

# The India Leather Corporation Private Ltd.

**(Recognised " Export House " by the Government of India)**

9, DAVIDSON STREET, MADRAS-1.

| Grams: | Phone | Telex: |
|---|---|---|
| TANDRIGHT | 22691 (3 lines) | 230 & 242 |

# செயற்குழு அறிமுகம்

**திரு. பொ. இரத்தினம்;**

திருச்சி தேசியக் கல்லூரியில் 111 பி.காம் படிக்கும் செயலாற்றல் மிக்க இந்த 22-வயது இளைஞர், நாமக்கல்லை யடுத்த திண்டமங்கலம் என்ற ஊரைச் சேர்ந்தவர். சென்ற ஆண்டு கல்கண்டு பத்திரிகையில் பூச்செண்டின் கட்டுரையைப் பார்த்து விட்டு, உணர்ச்சி வேகத்துடன் ஒரு மடல் வரைந்தவர், நேரிலேயே ஆசிரியர் குழுவைக் காண சென்னை வந்து அறிமுகமானார். பூச்செண்டின் செயற்குழு உறுப்பினராய் தன்னாலான வரை பணியாற்றுவதாக வாக்களித்து திருச்சி மீண்டார்.

அவர் அதிகம் பேசவில்லை. ஆனால் திருச்சியிலிருந்து அவர் செய்த பெருஞ் செயல்கள் சில திகைக்க வைத்தன. சில நாட்களில் பல சந்தாவும் பெற்றதோடு, பூச்செண்டு இதழ்களைத் திருச்சியில் கடைகளிலும் கல்லூரி விடுதிகளிலும் வெற்றிகரமாக விற்றுக் காண்பித்தார். திருச்சியில் 5 திரை அரங்குகளில் இலவசமாக எல்லா காட்சிகளிலும் விளம்பர 'ஸ்லைடுகள்' போட பிற உறுப்பின களோடு வழிசெய்தார். திருச்சிய பூச்செண்டின் மிக வேகமா வளர்ச்சிக்கு ஊன்றுகோல் தி இரத்தினம் என்றால் மிகையில் இந்தப் பொங்கல் மலர் சிறப்ப வரவேண்டுமென்பதற்காக, துழைப்புக் குறையக் கூடாதெ பதற்காக அரையாண்டு விடுமுறையைத் தியாகம் செய்து ஊருக்கு செல்லாமல் சென்னை வந்து சும 10 நாட்கள் மிகப்பெரு ஒத்துழைப்புக் கொடுத்தார்.

பூச்செண்டின் வளர்ச்சிக்கா எதனையும் செய்யக் காத்திருக்கு இந்த இளைஞரின் குறிக்கோ நாளைய நாட்டில் வளமான எ காலம் காண எழுத்திலும், பே லும் தீவிரமான, துணிகரமா ஒரு சமுதாயப் புரட்சியில் ஈடுப வேண்டுமென்பதே. வரும் கல் யாண்டு சென்னை வந்து சட்ட கல்லூரியில் சேர்ந்து பூச்செ டிற்கு இன்னும் நெருங்கிய ப யாற்ற இருக்கும் திரு. இரத்தின பிற செயற்குழு உறுப்பின களுக்கு ஒரு வழிகாட்டி என்ற மிகையில்லை.

---

**திரு. இளங்கோ**

தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகபட்டினத்தைச் சேர்ந்த திரு. இளங்கோ, திருச்சி பெரியார் கல்லூரியில் II பி.எஸ்ஸி வேதியல் பயின்று வருகிறார். இன்றை இளைஞர்களின் பயனுக ஆற்ற விழலுக்கு நீராகிக்கொண்டிரு பதை தடுத்து சக்தி மிக்க ஓ இளைஞர் அமைப்பை இந்த நா டில் உருவாக்க வேண்டும் என்

www.thamizham.net - Free E Books No TM 14721

ரியா வேட்கை கொண்ட இந்த ளஞர், விகடனிலும், கல்கண்டி ம் பூச்செண்டைப் பற்றி வந்த டுரைகளைக் கண்டு, கொள்கை வில் பூச்செண்டோடு தான் நெருங்கியுள்ளதைச் சுட்டிக் ட்டி, ஆர்வமுடன் மடல்கள் ரைந்தார். Indian Youth Asso-ion என்ற பெயரில் ஒரு புரட் சியாக இளைய பாரதத்தை காக்க ஒரு இயக்கம் தொடங்கப் ற காரணமானவர். சென்ற ண்டு அண்ணாமலைப்பல்கலைக் கத்தில் நடந்த இதன் தொடக் கூட்டத்தில் அழைப்பின் ரில் ஆசிரியர் குழுவிலிருந்து வர் சென்றபோது இவரது வத்தை உணர முடிந்தது.

திருச்சியில் பூச்செண்டின் வளர்ச்சிக்கு எல்லாக் கட்டங்களிலும் ஒத்துழைப்பளித்தவர். பூச்செண்டின் இன்பத்திலும், துன்பத்திலும் பங்கேற்கும் ஒரு நல்ல எழுத்தாளர். சென்ற இதழ் சுருங்கிவிட்டதைக் கண்டு 'ஒரு குழந்தை எழுந்து நடக்கும்போது கீழே விழுவது இயற்கை. எனவே வளர்ச்சியின் ஒருபடியாக இதனைக் கொள்ளுங்கள்'' என்று மிகவும் ஆறுதலான கடிதம் எழுதியிருந்தார். கல்லூரி விடுதியில் பொறுப்பான பணிகள் ஏற்பவர். செயற்குழு உறுப்பினர் திரு. குமணன், அண்ணாமலை பல்கலைக் கழகம் இவரது தம்பி என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர்களது எதிர்கால இன்பமயமான நல் வாழ்விற்கென்றே சேவை செய்யும் பூச்செண்டு பத்திரிகைக்கும் அதை நடத்தும் மாணவ சமுதாயத்திற்கும் எங்களது இதய பூர்வமான நல் வாழ்த்துக்கள்

ARUL & CO.

45, JONES ROAD, SAIDAPET, MADRAS-15:

PHONE 44 ~~1524~~ 4

தரமான பொருட்களை தவணை முறையில் விற்பனை செய்யும் தனிப் பெரும் விற்பனையாளர்கள்

www.thamizham.net - Free E Books No TM 14721

சென்னையிலிருந்து 70 மைல் தொலைவில் உள்ள இந்த இடத்தில் மனித உருவில் நடமாடும் பேய்களைக் காணச் சென்றோம்.

“நீ யார்? உண்மையைச் சொல்!” “இந்த ஊரில் நெருப்பு பிடிச்சு செத்தாளே ஒரு பெண் அவளுடைய ஆவி நான்”

சோர்வு நீக்கும்


பேய் பிடித்திருக்கிறதா?

# “சோளிங்கர்” செல்லுங்கள்!

பஸ் நின்றது.

ஆனால் அந்த இடத்தில் பஸ் ஸ்டாபிங் இல்லை. இங்குதான் கோயிலுக்குச் செல்ல இறங்க வேண்டும் என்றார்கள். ஒரு பெரிய மலை. ஒரு சிறிய மலை. அதை நோக்கிச் செல்லும் மேடு பள்ளமான பாதையை நோக்கி இருவரும் நடந்தோம். மலையடிவாரத்தில் ஒரு சின்ன, ஆனால் பரபரப்பான ஒரு கடை. காப்பி பிற சாமான்கள் கிடைக்கும் ஒரே கடை அல்லது சின்ன சிற்றுண்டிசாலை.

அதனுள் நுழைந்தவுடன் கடையின் சொந்தக்கார ராமய்யங்கார் தடபுடலாக வரவேற்றார். நாங்கள் பத்திரிகையில் எழுதுவதற்காக வந்திருக்கிறோம். என்றவுடன் அவர் உற்சாகம் பலமடங்காயிற்று சோளிங்கரை சொந்த ஊராகக் கொண்டு தலைமுறைகளாக வாழ்ந்து வரும் இவரிடம் பல செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிந்தது.



காப்பி அருந்திக் கொண்டே (நெஸ்கேப் ஒன்று கொடுத்தார். நன்றாக இல்லை. கொடுத்த வாழைப் பழமும் சுத்தக் காய். ஆனால் நல்ல மனிதர்.) அவர் சொல்வதைக் கேட்டோம்.

“அதோ உயரமாக ஒரு மலை தெரிகிறதே அதன் மேலுள்ள கோல்தான் நரசிங்க சாமி கோயில். பக்கத்தில் இருக்கிறதே இந்த சின்ன மலை அதன் மேல்

www.thamizham.net - Free E Books No TM 14721

இருக்கும் கோயில் ஆஞ்சநேய ருடையது"

"இங்கு பேய்களும், பேய்பிடித்த வர்களும், மந்திரவாதிகளும் அதிகம் வருவதாகக் கேள்விப்பட்டோம். நாங்கள் பேய்களையும், மந்திரவாதி களையும் எங்கு சந்திப்பது?"

"நீங்கள் தவருகக் கேள்விப்பட் டிருப்பீர்கள். இது ஒரு தூய்மை யான இடம். நீங்கள் பேய் விரட் டப்படும் பல இடங்களை பார்த் திருப்பீர்கள். ஆனுல் இங்கு விரட்டப்படுவது ஒரு புதுமையான முறையில். இந்த எல்லையில் ஒரு மந்திரவாதியையும் அணுக விட மாட்டோம். வந்தால் துரத்தி அடித்து விடுவோம். பேய்களை யும் இங்கு பார்க்க முடியாது,

"அப்படியா!" என்ருேம் வியப் புடன் [ஏமாற்றமும் கூட]

"இங்கு பேய் பிடித்தவர்களும், மனநிலை சரியில்லாதவர்களும் அதிகம் பேர் வருகிருர்கள். இதைத் தவிர குழந்தை பிறக்காத வர்களும் மற்றும் எல்லாவிதமான மனக்கஷ்டங்கள் உள்ளவர்களும் நிறைய வருகிருர்கள்"

"பேய் பிடித்தவர்கள் குணமாகி ருர்களா?"

"நூற்றுக்கு நூறு குணமாகி விடுகிருர்கள். யாரும் தோல்வி யோடு திரும்புவதில்லை. மனி சம் மந்தமான எல்லா நோய்களும் குணமாகின்றன. இங்கு குண மாகாத ஒரே நோய் வலிப்பு ஒன்று தான்"

---

*மனைவியானவள் கணவனிடம் காணப்படும் நல்ல குணங்களை அடிக்கடி எடுத்துக் கூறி அவனைப் புகழ வேண்டும். ஆனுல் இப் புகழ்ச்சி போலியாகவோ, செயற் கையாகவோ இருக்கக்கூடாது. இதயத்திலிருந்து வரும் உண்மை யான புகழ்ச்சியாக இருக்க வேண்டும்.*

---

"எப்படி குணமாகின்றது? யார் இவர்களை அழைத்துக் கொண்டு வருகிருர்கள்?"

"நோயாளிகளில் சிலர் தாங்களே நோயுற்றிருப்பதாக உணர்ந்து இங்கு வருகிருர்கள். சிலர் அழைத் துக் கொண்டு வரப்படுகிருர்கள். பேய் பிடித்தவர்களுக்கு எப்போ தும் பேய் பிடிப்பதில்லையே. சில நேரம் நல்ல நிலையில் இருக்கிருர் களே. குணமாக வேண்டுமென் பவர்கள் 48 நாட்கள் இங்கு தங்கி யிருந்து சேவை செய்ய வேண்டும்"

"சேவையா?"

"ஆம். சேவை என்பது ஒரு பயிற்சி. தினமும் காலை குளித்து விட்டு ஈரத்துணியுடன் மலை யேறி 108 தடவைகள் ஒவ் வொரு பிரகாரத்தையும், கட வுளையே மனதில் தியானித்துக் கொண்டு வலம் வரவேண்டும்."

"இதனை அடுத்து பூசாரிகள் மந்திரம் ஓதி பேய் ஓட்டுவார் களா?"

"அதுதான் கிடையாது. இங்கு ஒரு புதுமையான முறை. கோயில் குருக்கள், தனிப்பட்ட மனிதர்கள்

www.thamizham.net - Free E Books No TM 14721

யார் துணையும் இன்றி கடவுளின் கிருபையால், வெறும் சுய முயற்சியால், சேவைகளால் மட்டுமே இங்கு எல்லா நோய்களும் குணமாகின்றன. பேய் விரட்ட யாரும் துணை செய்வதில்லை. அது வே சென்று விடும்''

"அப்படியா! வியப்பாக இருக்கிறதே. இந்த இடத்தின் வரலாற்றுப் பெருமை பற்றி தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.''

உடனே அந்தக் கோயில் பற்றி தல வரலாற்று சிறப்பு வெளியீடு ஒன்றை எடுத்துக் காண்பித்தார். அதில் தெரிந்துக் கொண்டவை:-

சங்க காலத்தில், கரிகாலன் காலத்திலிருந்தே இது சோழ மன்னர்களின் கைவசம் இருந்தது. சோழ மண்டலத்தை கோட்டங்களாகப் பிரித்தபோது தொண்டை மண்டலத்தில் "சோழலிங்கபுரம்" என்ற பெயருடன் ஒரு கோட்ட இருந்தது. பிறகு அது சோழ லிங்கபுரமாயிற்று. இப்போது "சோளிங்கர்!'' வைணவ சமய எழுச்சியில் முக்கிய இடம் பெறும் தலம் இது. பேயாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் இதே இடத்திற்கு வந்து பாடியிருக்கிறார்கள். இராமனுசரின் வைணவக் கோட்பாடுகள் பரவ முக்கிய இடமாகவும் இது இருந்திருக்கிறது.

கி.பி, 1588ல் சுவாமி தொட்டாச்சாரியர் என்பவர் விசய நகர பேரரசர்களின் துணைக்கொண்டு இந்த அழகிய இரு கோயில்களையும் அமைத்தார். பின்பு 1963ல் தமிழக அரசு ரூ. 50,000 செலவில் இக்கோயில்களை புதுப்பித்து அமைத்திருக்கின்றது''

"மிக்க நன்றி. விடை பெறுகிறோம். நாங்கள் பேய் பிடித்தவர்களைக் காண விரும்புகிறோம் வழி சொல்லுங்கள்''

"நீங்கள் கார்த்திகை மாதத்தில் வந்திருந்தால் பலவிதமாக பேய் பிடித்தவர்களைக் கண்டிருக்கலாம். கார்த்திகை 5 வாரமும் இங்கு 'விசேஷம்' பெரிய மலையில் இருக்கும் நரசிம்ம சுவாமி கோயிலை முதலில் பாருங்கள். பிறகு மாலை ஆஞ்சநேய சுவாமி கோயிலுக்குப் போங்கள். மாலை 4 மணியளவில் உங்களுக்கு இஷ்டமிருந்தால் பேயாடுபவர்கள் யாரையாவது

---

சாவுக்கு பத்து மைல்

இராணுவ நீதி மன்றம் சில கைதிகளுக்கு மரண தண்டனை வழங்கியது. தண்டனை நிறைவேற்றப்பட வேண்டிய இடம் நகரிலிருந்து பத்து மைல்கள் தொலைவிலுள்ள காடு. வீரர்கள் கைதிகளை அழைத்துச் சென்றனர். கைதிகளில் ஒருவன் கேட்டான். "தண்டனைப்படி என்னைச் சுடத்தான் போகிறீர்கள் அதற்கு ஏன் பத்து மைல்கள் நடத்தி துன்பப் படுத்தவேண்டும்'' வீரர்களில் ஒருவன் பதிலளித்தான். "துன்பமாவது பத்து மைல் போனதும் தீர்ந்து விடும். நான் மேலும் பத்து மைல் திரும்ப நடந்து வந்து தொடர்ந்து வாழ வேண்டும், என்றான்.

---

ஆஞ்சநேயர் கோவிலில் பார்க்கலாம்''

இந்த தகவல்களோடு விடைபெற்று நரசிங்க பெருமான் கோயில் கொண்டுள்ள அந்த உயரமான மலையின் படிகளின் வழியே ஏறினோம். நெடுந்தூரம் எங்களைத் தவிர வேறு மனித உருவங்களே இல்லை. மிக மிக அமைதியாக இருந்தது. மேலே செல்லச் செல்ல, தூரத்து அழகிய இயற்கை காட்சிகளும் பாறையிலே அமைக்கப்பட்ட அழகிய அந்தக் கோயிலும் மெல்லிய சூரிய ஒளியும், இதமான தென்றலும் அந்த இடத்திலேயே என்றும் இருக்கக்கூடாதா என்ற உணர்வை ஏற்படுத்தின. வழியில் கண்ட இருவருடன் பேசிக்கொண்டே மலையுச்சியை அடைந்தோம். அழகிய அந்தக்கோயிலின் உள்பிரகாரமும், அமைதியான கோயிலமைப்பும் நெஞ்சில் நிற்பவை.

அர்ச்சனை நடைபெற்றது. கீழே ராமய்யங்கார் சொன்னபடியே அந்த நேரத்தில் நோயாளிகள் யாரும் வரவில்லை. இதுபோன்ற கோயில் என்றால் கூட்டமும், குப்பைகளும், வெளவால்களின் மணமும் இருப்பதையே கற்பனை செய்வோம். ஆனால் இந்தக் கோயில் மிக அமைதியாக, மிகத் தூய்மையாக, கோயிலுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

எழில் பள்ளிகொள்ளும் அந்த மலையுச்சியிலிருந்தே தென்றலை அனுபவித்த வண்ணம் கீழே இறங்கி வந்தோம். எங்களுக்குத் தோன்றியது, மனநோயாளிகள் குணமடை

---

**இரவில் படிப்பது நல்லதா?**

இதைப் பற்றி ஜெர்மன் வல்லுனர்கள் நடத்திய ஆராய்ச்சிகளின் முடிவுகள் இதோ:

| படிக்கும் நேரம் | நினைவில் நிற்பது |
|---|---|
| 10 மணிக்கு மேல் | 52% |
| 11 மணிக்கு மேல் | 27% |
| 12 மணிக்கு மேல் | 9% |

ஆனால் பெரும்பாலான மாணவர்கள் இரவில் படிப்பதே நல்ல பயனளிக்கிறது என்கிறார்களே, அது எப்படி? தெரியவில்லை?

---

கிறார்கள் என்றால் அதற்கு மனதைக் கழுவி அமைதிபடுத்தும் அந்த அருமையான சூழ்நிலை ஒரு முக்கிய காரணமென்று. காலை எழுந்து இளந்தென்றலுடன் மலையேறுதல் ஒரு உடற்பயிற்சி; மனதில் கடவுளை மட்டுமே நினைத்துக் கொண்டு பிரகாரத்தை சுற்றி வருவது ஒரு மனப்பயிற்சி. இவையே உளவியல் வழியில் அங்கு எல்லா நோய்களையும் குணப்படுத்துகின்றன.

அடுத்து ஒரு பர்லாங்கு தூரத்திற்கும் அருகில் உள்ள ஆஞ்சநேயர் கோயில் உள்ள அந்த குன்றின் உச்சியை அடைந்தோம். இது நரசிங்கசாமி கோயிலைப் போல அவ்வளவு அமைதியாக இல்லை. பல பக்தர்களும் நோயாளிகளும் சூழ்ந்திருந்தனர். பெரும்பாலோர் பெண்கள். கணக்கு வைத்துக் கொண்டு பிரகாரத்தைச் சுற்றிக்கொண்டு வரும் பெண்களைக் கண்டோம். தங்களுக்கு மனநோய் குணமாக வேண்டும், குழந்தை பிறக்க வேண்டும், பேய் அகல

www.thamizham.net - Free E Books No TM 14721

வேண்டும் என்பன போன்ற ஒரு நிலைப்பட்ட எண்ணத்தில் அவர்கள் மூழ்கியிருப்பதை உணர முடிந்தது.

பேய் பிடித்தவர்களைக் காண வேண்டுமே! எப்படிக் காண்பது? கோயில் குருவைக் கேட்டோம். சரியாக நான்கு மணிக்கு பூசை நடைபெறும். பொறுத்திருங்கள். அப்போது உங்களுக்கு வாய்ப்பு ஏற்படலாம் என்றார்.

நான்கடிக்க இன்னும் சில நிமிடங்களே இருந்தன. எங்களுக்கு ஓரே ஆவல், வந்திருக்கும் பெண்களில் யாருக்கு பேய் பிடிக்கும் என்று ஊகிக்க முடியவில்லை. சிலர் பேசிக்கொண்டிருந்தார்கள். சிலர் கண்ணை மூடிக்கொண்டு வேண்டிக் கொண்டிருந்தார்கள். சிலர் பிரகாரத்தை வலம் வந்து கொண்டிருந்தார்கள்.

கடைசியாக 4 மணிக்கு சற்று பிறகு கோயில் பெரிய மணி ஒலித்தது. கோயில் உள் கதவைத் திறந்து கோயில் குரு பூசை செய்தார். எல்லாப் பெண்களும் மிக உருக்கமாக வேண்டுதலில் ஈடுபட்டனர். கைமணி ஒலித்தது. முதலில் நின்றிருக்கும் அந்தப் பெண் மிக உருக்கமாக கண்ணை மூடிக்கொண்டு கையைக் குவித்து நிற்கிறாள். மெல்ல மெல்ல ஒரு வித மயக்க நிலைக்கு ஆட்கொள்ளப் படுகிறாள். [யோகானந் காமிராவை 'கிளிக்' செய்ய தயார்படுத்திக் கொண்டார்] மெதுவாக ...வள் தலை ஆடுகிறது. சுற்றியிருப்பவர்கள் அவளை கீழே அமர வைத்தனர். அவள் தலை சுற்றி சுற்றி

---

இந்த வருடம்
1970 ஆ — இல்லை 1977.
வரலாற்று அறிஞர்கள் முடிவுகளின்படி அநேகம... கிறிஸ்து பிறந்தது கி. மு... அல்லது கி.மு 6 ஆக இரு... வேண்டும். இதனைக் கணக்... வதில் ஏற்பட்ட பிழையி... நாம் தவறாக கிறிஸ்து 19... ஆண்டுகளுக்கு முன் பிறந்... என்று சொல்லிக் கொண்டி... கிறோம்.

---

ஆடுகிறது. பேய் அவளைப் பி... துக்கொண்டதாகக் கூறினார்க... [நல்ல வெளிச்சம் இல்லை. இருந்... யோகானந் 'கிளிக்' செய்தார். அ... படம் தெளிவாக விழாதத... இங்கு வெளியிட முடியவில்... அவள் வேகம் அதிகரிக்க ... கோயில் பிரகாரத்து இருப்... பிடிகளில் 'டங்' என்று மோ... கின்றது. எனவே அவளை பி... ரத்து இரு இரும்புப்பிடிக... கிடையில் வசதியாக அமர வை... னர். சில நிமிடங்களுக்கு மு... பக்கத்திலிருந்த பெண்களுட... பேசி மகிழ்ந்த இந்தப் பெ... அதற்குள் இப்படி ஆகிவிட்டா... என்று எங்களுக்கு வியப்... இருந்தது. கண்கள் மூடிய ஒரு... உறக்கத்தில் அவள் இருக்க ... இன்னும் வேகமாக ஆடியது.

ஒரு பெண் கேட்டாள்: "நீ ய... உண்மையைச் சொல்";

"இந்த ஊரில் நெருப்பு பிடி... செத்தாளே ஒரு பெண் ... ளுடைய ஆவி நான். நேத்துத்...

www.thamizham.net - Free E Books No TM 14721

வளைப் பிடிச்சேன்'' என்றது
ய்பிடித்த பெண்ணின் குரல்.

யோகானந் கேட்டார் "உன்னைப்
ாட்டோ பிடிக்கலாமா?" [பிடித்
கி விட்டது சும்மா கேட்டார்.]

"என்னையா? ஆஹா!... என்னை
துக்கு போட்டோ பிடிக்கிறீங்க
வண்டாம்"

அந்தப் பெண்ணின் கணவர்
ருகில் இருந்தார். அவர் ஒரு
ற்பூரத்தை பெண்ணின் கரத்தில்
வத்துக் கொளுத்தி 'ஆஞ்சநேயர்
ட்சியாக போய் வருகிறேன்
ன்று சொல்' என்றார்.
கற்பூரத்தைக் கொளுத்தி தரை
ல் அடித்து அணைத்துப்
ோகிறேன்'' என்றாள் பேய்
டித்தவள்.
ஏமாற்றுகிறாய். இப்படி அல்ல
ந்தா மீண்டும் கொளுத்துகிறோம்
கமேல் அடித்து போய் விடு
றேன் என்று சொல்லி அணை''
ன்றனர்.
"ஆ! போய் விடுகிறேன். கை
ரிக்கிறது. சீக்கிரம் அணைத்து
டுங்கள். இராமர் சாட்சியாய்
னுமார் சாட்சியாய்... (இப்படி
டுக்கிக்கொண்டே போய்) நான்
ாய் விடுகிறேன்'' என்றது
ரல்.
பிறகு தலை முடி ஒன்றை, போய்
டுவதன் சாட்சியாக முடிச்சு
ாடச் சொன்னார்கள். ஒருவழி
க ஆட்டம் குறைந்தது. பெண்
ின் கணவரை சந்தித்து இது
ற்றிய விவரம் கேட்டோம்.
ண்ணின் பெயர் கஸ்தூரி
யாம். இவர் பெயர் தாமோதரன்
ஞ்சியை அடுத்த மேல் மதுர

---

மனைவி: நான் பாடும்பொழுதெல்லாம் ஏன் வாசலில் போய் நின்று கொள்கிறீர்கள். நான் பாடுவது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?

கணவன்: அதற்காக இல்லை. நான் உன்னை அடிக்கவில்லை என்று பக்கத்து வீட்டுக்காரருக்குத் தெரியும்படியாகத்தான் அப்படி வாசலில் போய் நிற்கிறேன்.

---

மங்களம் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இங்கு வந்த சில வருடங்களாக பேய் பிடித்தது சற்று குணமாகியுள்ளதென்றும், ஏதோ வெளியில் தனியே உலாத்தும்போது பேய் வந்து பிடித்திருக்கலாமென்றும் கூறினார்.

பேய்கள் எல்லாம் வெறும் கற்பனை என்று நம்புகிறவர்கள் இதற்கு வேறு விளக்கம் கொடுக்கிறார்கள். பேய் பிடித்தல் என்பது ஒரு வகை மனோவியாதியே என்கிறார்கள். சில பேய் பிடித்தவர்கள் (கல்வியறிவில்லாதவர்கள்) ஆங்கிலம், இந்தி, மேலும் பல மொழிகளில் பேசுகிறார்கள் என்று கோயில் குரு தெரிவித்தார். இது எப்படி முடிகிறது? பேய் வருவதையும், பிடிப்பதையும் இங்கு மிகப் பலர் நம்பவே செய்கின்றனர்.

எது எப்படியானாலும், எழில் ஆர்ந்த சூழ்நிலையில் அமைந்துள்ள இந்த சோளிங்கர், உடல் சோர்வையும், மனச்சோர்வையும் போக்குகிறது என்பது மட்டும் உண்மையாகவே இருக்கிறது.

www.thamizham.net - Free E Books No TM 14721

**மனிதனிக்கு இறைவன் அளித்திருக்கும் அருமையான மந்திரசக்தி சிந்திக்கும் திறமை. வாழ்வின் எந்தக் கட்டத்திலும் அந்த சக்தியை பயன் படுத்தத் தவருதே எனவே—**

# சிந்தித்துச் செயலாற்று

**இ. எஸ். மெர்வின்**

நம்முடைய செயல்கள் அனைத்தும் வெற்றி பாதைக்குச் செல்ல வேண்டுமானல் சிந்தனை என்ற வழி காட்டியின் மூலம் செல்ல வேண்டும். விளக்கு எரிய வேண்டுமானல் கட்டாயம் எண்ணெய் வேண்டும்.

அதே போல் தான்—

வாழ்க்கைக்கும் சிந்தனை, வேண்டும்!

சிந்தனை என்பது உள்ளத்தின் விளக்கு. சிந்திக்காமல் எந்தச் செயலேயும் செயலாற்ற முடியாது. "வாழ்க்கை என்னும் நூலில் ஆழ்ந்த சிந்தனைகள் என்ற மணிகளை கோர்த்த மாலையுடையவனுக்கு வேறு ஜெபமாலை வேண்டியதில்லை" என்று பாரசிக பழமொழி கூறுகிறது.

தொடக்கத்தில் சிந்தனை செய்யாவிடில் முடிவில் வருந்த நேரிடும். சிந்தனை செய்வதின மூலம் தான் நம்முடைய மனம் மாற முடியும். புத்தர் துன்பத்தைப் பற்றி சிந்தனை செய்யவில்லையா? லிங்கன் அடிமைகளைப் பற்றி சிந்திக்கவில்லையா? காந்திஜி சுதந்திரத்தைப் பற்றி சிந்திக்கவில்லையா?

வாழ்வே சிந்தனையில் தான் அடங்கி இருக்கிறது சிந்தனைகள் சிறந்தவையாக இருக்க வேண்டும். எதனையும் தொடககத்திலே சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். சிந்தனையின் மூலம் கெட்ட மனதையும் நல்ல மனதாக்க முடியும்.

மனதில் தோன்றும் சிறிய சிந்தனை தான் வாழ்க்கையை அமைக்க முடியும் சிந்தனையில் சிறப்பும் தெளிவும் பலமும் இருந்தால் வாழ்க்கையிலும் குழப்பம் தோன்ருது சிந்தனையிலே செல்வத்தை காணவிட்டால் வாழ்க்கையில் அந்த செல்வத்தைக் காணவே முடியாது.

சிந்தனையில் உருப்பெற்றது தான் நாம் காணும் அதிசயங்கள் எல்லாம்! கையால் செய்கின்ற காரியங்களைவிட சிந்தனையால் செய்கின்ற காரியங்கள் அரியவை. உயர்ந்த சிந்தனைகளை நம்முடைய நடைமுறைக்கு கொண்டு வர முயல வேண்டும்.

உயர்ந்த சிந்தனைகள் நம்மிடம் இருந்தால் தான் வாழ்க்கையில் உயர முடியும் வாழ்க்கையில் விரும்பிய வெற்றியை பெறுவதும் பெற

www.thamizham.net - Free E Books No TM 14721

*With best compliments from*

**E. I. D. PARRY LTD.**

**DARE HOUSE**

MADRAS-1

www.thamizham.net - Free E Books No TM 14721

முடியாமல் போவதும் சிந்தனையின் பயன் தான் வெற்றிக்குரிய எண்ணங்களும் தோல்விக்குரிய எண்ணங்களும் தோற்றுவிப்பதற்கு அடிப்படை......

சிந்தனை தான்.

ஆபத்துக்களையும் அபாயங்களையும் பற்றி எப்பொழுதுமே, ஆராய்ந்து கொண்டே இருப்பவன் ஒருகாலும் கடல் யாத்திரைக்கு போக மாட்டான் சிந்தனை ஒரே பாதையில் செல்ல வேண்டும். ஒரே பாதையில் சென்றால் தான் குறிப்பிட்ட ஊரை அடைய முடியும் அல்லவா?

சிந்தனை சிதறுமல் இருக்க வேண்டும் எல்லாவற்றையும் சிந்தித்து செயலாற்ற முடியாமல் குழம்பிக் கொண்டு இருக்கக் கூடாது ஆற்றிலுள்ள நீர் கலங்கி, குப்பையும் மண்ணும் கலந்திருந்தால் எவரும் அதனை உபயோகிக்க மாட்டார்கள். தெளிந்திருந்தால் தான் எல்லோரும் உபயோகப்படுத்துவர் அந்தநீர் பலருக்கும் பயன்படும்.

பி.டி.பேர்னம் என்பவர் பத்து லட்சம் டாலரை வியாபாரத்தில் போட்டு நஷ்டம் அடைந்து விட்டார். நஷ்டத்தை எவ்வாறு சரி செய்வது என்று சிந்தித்தார்; விடாமல் சிந்தித்தார்.

அதன் பயன்......

"எப்படி பணம் சம்பாதிப்பது?" என்று உணர்ந்தார். தான் உணர்ந்ததை புத்தக வடிவத்தில் அமைத்து ஒரு நூலாக வெளியிட்டார். நூல் வெளி வந்தவுடன் பலரும் அதனை வாங்கி, படித்து பயன் அடைந்தனர். அவரும் சிறப்பாக முன்னேறினர்.

அப்படி முன்னேறியதற்குக் காரணம் அவருடைய சிந்தனை தான்.

அப்டன் லிங்களா•சிரிப்பு துணுக்குகள் எழுதி அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு பள்ளி சம்பளத்தைக் கட்டினுர். அப்படி சிரிப்பு துணுக்குகள் எழுத காரணமாக இருந்தது—அவருடைய சிந்தனைதான்.

"கனடாதேசத்து பறவைகள்' என்ற நூலை வாங்க முடியாமல் தவித்தவர் நாற்பத்திரண்டு நூல்களை எழுதினர் எப்படியெனில் அவருடைய சிந்தனையின் ஆற்றலின் மூலம் தான்! அப்படி எழுதியவர் ஔடான்.

பாரோ என்ற எழுத்தளார் சில சமயங்களில் கெட்ட கனவுக் கண்டு விழித்து அதனையே நினைத்து படுத்துக்கொண்டு இருப்பார். ஒரு நாள் வழக்கம் போல் படுத்தவுடன் கனவு கண்டு விழித்து விட்டார்.

கனவைப் பற்றி சிந்தித்தார். அந்த கனவைப் எப்படி பணமாக்குவது என்று தீராது சிந்தித்தார். அதன் பலன்—

அந்த கனவினை மையமாகக் கொண்டு எழுத தொடங்கினுர். 'டார்ஜான் கதை' என்று தொடர் கதையாக எழுதி பெரும் பணமும் புகழும் சம்பாதித்தார். இந்த நிலை அடைய காரணம் விடாது சிந்தித்தது தான்

---

* ஆடு குட்டி போடுவதில் நம் விருப்பம் போல் ஆணுகவோ பெண்ணுகவோ குட்டி போடும்படி செய்ய சோதனைகள் நடத்தி வெற்றி கண்டிருக்கிருர் சோவியத் விஞ்ஞானி உகூலோவ்.

---

www.thamizham.net - Free E Books No TM 14721

‡ பறக்கும் தட்டுக்கள் பொய்யாகி விட்டன. பூமியைத்தவிர எந்த கிரகத்திலும் உயிரினம் வாழ்வதற்கு வாய்ப்பே இல்லை என்று விஞ்ஞானிகள் திண்ணமாக உறுதிப் படுத்து விட்டார்கள்.

---

எதையும் சிந்தனையுடன் தெளிவாக செய்தல் வேண்டும். சிந்தனையை சிதறவிட்டு விட்டால் மீண்டும் பிடிப்பது எளிது அன்று.

சிந்தனை என்ற கயிறு பிரிந்து விட்டால் அதிலிருந்து தோல்வி என்ற பல கயிறுகளை பிரியச் செய்து விடும். சிந்தனையுடன் செயலாற்றியபடியால் தான் பல அறிஞர்கள் உயர்ந்து இருக்கிறார்கள்.

நீராவி இயந்திரம். தந்தி, வானொலி, வானூர்தி இவையாவுமே கை கூடாதவை என எண்ணியவை தான். ஆனால் இவையாவும் கை கூடியவைதான் என்று நிரூபித்து காட்டியதற்கு அடிப்படை சிந்தனை தான்.

அரிய பெரிய செயல்கள் அனைத்தும் சிந்தனையின் மூலம் உருவாகி இருக்கின்றன என்று அறிந்து கொள்ள வேண்டும் நாமும் நன முறையில் சி  தித்து சரியான முறையில் செயலாற்றி உயர்வடைய வேண்டும்.

முற்றும்.

---


# V. T. C. Funds (P) Ltd.,

Regd No : 1436

*Regd Office* :
166, SHEEPINGS ROAD,
BANGALORE-1.
Phone : 51708

*Zonal Office*
189, FIRST AGRAHARAM,
SALEM-1.
Phone : 5494

**SAVE TO-DAY — SECURE FOR TO-MORROW**

***Suitable to all pockets***
***Millions of people have benefitet***
***through the various groups in India***
***For further details please***
***contact your nearest office***

Managing Director :
V. THAKSHINAMOORTHY

The Leading Auction & Drawing Chit premiers in India over 130 Branches & Sub-Offices


www.thamizham.net - Free E Books No TM 14721

# தென்றல் ஒசை

## அத்தியாயம் 15

**எஸ். லட்சுமி சுப்பிரமணியம்**

வீடு திரும்பிய போது பின்னிரவு தொடங்கி விட்டது. நிலா பயந்து மெதுவாகத் தலை நீட்டும் காலம் பழைய பித்தளைத் தட்டைப் போல அது எழவும், விடிய இன்னும் மூன்று மணி நேரம் தான் மிகுதி என்று நினைவுபடுத்துவது போல் இருந்தது

வாசற் கதவைத் திறந்து ராதை நிழல் வடிவமாக ஒரு கணம் நின்றாள் பிறகு அவனை எதுவும் கேட்காமல் உள்ளே போய் விட்டாள். அவன் தான் தாழ்ப்பாளை இழுத்து மூடிக் கொண்டு மாடிப்படி ஏறினான். அவளுக்கு இந்த நடுநிசிவாழ்க்கை இப்போது பழக்கமாகி இருக்க வேண்டும். அவனைக் கேட்டு, தெறித்தாற்போல ஒரு பதிலை வாங்கிக் கொள்ளவும் அவளுக்கு மனமில்லை.

கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து வைத்து விட்டுப் படுத்தான் குளிர்ந்த நீராக இரண்டு தடவைகள் பருகியும் தாகம் அடங்கவில்லை. மனத்தின் வறட்சி உடலையும் காய வைத்துக் கொண்டிருந்தது ஜன்னல் வழியே பின்புறம் பார்த்தான. அடையாற்று பாலம் வரை ஆங்காங்கு தெளித்தாற் போலக் குடிசைகள்.

நடுவே தீயை மூட்டி, சுற்றிலும் தம்பட்டம் அடித்துப் பாட்டுப் பாடிக் கொண்டிருந்தார்கள் ஏழெட்டு ஆண்கள். கும்பல் கும்பலாகப் பெண்களும் குழந்தைகளும் அவர்கள் பாட்டின் நடுவே சிரிப்பும் கொம்மாளமுமாககக் கலந்து கொள்வது காதில் விழுந்தது. கணீரென்ற குரலில் ஒரு நடுவயதுப் பெண் பாடினாள். அவனுக்குப் பழக்கமான திரைப்படப் பாட்டுத் தான் அது. ஆனால் அந்தக் குரலில் எத்தனை எளிமை? அந்தப் பாட்டுக்கே ஒரு குழந்தைக் கவர்ச்சி வந்து விட்டது போன்ற தோற்றம்?

அவன் உள்ளத்தில் இரத்தம் கசிந்தது. குப்பத்தில் வாழுகின்ற மக்கள் அவர்கள். இன்னும் இரண்டு மணி நேரத்தில் வேலைக்குப் போக வேண்டியவர்கள்: அப்புறம் எட்டு மணிநேரம் அயராமல் உழைத்தால் தான் இரவுச் சாப்பாட்டுக்கு வழி பிறக்கும். ஆனாலும் அவர்கள் எத்தனை மகிழ்ச்சியோடு இருந்தார்கள்? கும்மாளமிடும் குரலில் மருந்துக்கும் கவலை எங்கே இருந்தது?

இருப்பதுபோதும், கிடைத்ததே அதிகம் என்ற மனப்பான்மை வேலை சாக்கிவிட்ட இதயமா அப்படி பஞ்சிலும்லேசாக மிதந்து கொண்டிருக்கிறது. அவன் அப்படி வாழ்ந்த நாட்களே இல்லையா? அந்த எளிமையும் இனிமையும் இப்போது எங்கே? இயற்கையாக, நாகரிகத்தின் கபடமும் வஞ்சமும் இன்றி வாழும்

www.thamizham.net - Free E Books No TM 14721

* ஜெர்மன் நாட்டின் ஹாம்பர்க் நகருக்கு தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை. எனவே சுவீடன் நாட்டு ஏரியிலிருந்தும் சுவிட்சர் லாந்து ஆல்ப்ஸ் மலையிலிருந்தும் குழாய்கள் மூலம் தண்ணீர் இறக்குமதி செய்கின்றார்கள். (காவிரியிலிருந்து சென்னைக்கு குழாய் மூலம் தண்ணீர் கொண்டுவருவதே இங்கு பகீரதப் பிரயத்தனமாக இருக்கிறது)

வாழ்க்கையில் தான் அதற்கு உயிர் இருக்குமோ?

ஜன்னலை மூடினான். அந்தக் காட்சியையும், கலப்பில்லாத களிப்பையும் பார்க்கும் நெஞ்சும் கூட அவனுக்கு இல்லை. கட்டிலில் படுத்துக் கொண்டான் வாசற் கதவு ஒருக்களித்திருந்தது. குறட்டின் சிவப்புச் சிமிட்டுப்பரப்பு நிலவு விழுந்து பளபளத்தது. அறை இருட்டாக இல்லை; மங்கிய வெளிச்சத்தில் உறங்குவது போல இருந்தது.

"ராது" என்று குரல் கொடுத்தான்மெதுவாக. பதில் இல்லை. அப்புறம் தான் அறையில் அவள் மட்டும் தனியாகப் படுத்திருக்கும் ஞாபகம் வந்தது. அவள் மாடி ஏறிவரவில்லை. தனிமையில் தூக்க அமைதியைத் தேடிக் கொள்ள அவள் பழகிக் கொண்டு விட்டாள். அன்று அவன் அழைத்திருந்தால் அவள் கூடவே படி ஏறிவந்திருக்கலாம். அவன் அழைக்கவில்லையே?

நிலா பொழிந்து கொண்டே இருந்தது. தவறிவிட்ட சந்தர்ப்பத்தை, காலியாக இருந்த இடத்தை எடுத்துக் காட்டி, நிலவின் ஒளி ரொளி சூனியமான எதிர்க்கட்டிலை உருவமிட்டது. உணர்வும் நினைவும் அசை போட்டன. ஆனால் மனப் பசு நிம்மதியாகவா அசைபோடும்?

பத்து ஆண்டு இல்வாழ்க்கையின் நினைவுகள் வந்து அலைமோதின. மணமான புதிதில் அவளும் அவள் தந்தையும் கிராமத்தில் தன் வீட்டுக்கு வந்ததும், அவன் குரல் கேட்கும் போதெல்லாம் வெட்கத்தோடு திரும்பிப் பார்த்து விட்டு அவள் ஓடியதும், ஒரே கூட்டுப் பறவைகளாய் அந்தக் கிராமத்து வீட்டில் அவர்கள் சேர்ந்து வாழ்ந்ததும், என்னென்னவோ கனவுகளோடு சென்னைக்கு ஓடி வந்ததும்—

கனவுகள் தானா?

சட்டையை இழுத்து முடிக் கொண்டு போர்வையைக் கழுத்து வரை சுற்றிக் கொண்டான். ஏதோ ஒரு குளிர், மனத்தையும் உடலையும் குத்துகிறது. தலையணைக்கு அடியில் கையைவைத்துக் காதை மூடிக் கொண்டான். கடல் அலைகளும் காவிரிக்கரையும் மாறி மாறி நினைவுக்கு வந்தது. அந்த நினைவுகளின் தாலாட்டுதலில் மனக்கண் அமட்டிக் கொண்டு மூடிற்று. தூக்கம் விடியும் வேளையில் கண்களைச் செருகிற்று

எட்டு மணி வெய்யில் கண்ணில் குத்துவது போல விழுந்த போது தான் விழித்து எழுந்தான். இரவு சரியாகத் தூங்காத எரிச்சல் கண்ணில் தூசி விழுந்தது போல உறுத்திற்று.

மழை பிசுபிசு வென்று தூறிக் கொண்டிருந்தது ஜன்னல் கம்பிகளின் வழியே கையை நீட்டிப் பார்த்து விட்டு, மஞ்சள் தூசியாக வெய்யிலையும் தவிட்டுத்தூற்றலாக மழையையும் வியந்தபடி கீழே இறங்கிப் போனான்.

பின் கொல்லையில் படபடவென்று சப்தம் கேட்டது. தீபாவளிக்கு இன்னும் இரண்டு வாரங்கள்


www.thamizham.net - Free E Books No TM 14721

கூட இல்லை. குழந்தைகளின் கொண்டாட்டம் இப்போதே ஒலிக்க ஆரம்பித்து விட்டது. மஞ்சளாக வான் கோழி மினுக்காக எரிந்து குடைகவிழும் மாத்தாப் புக்களைக் கண்ணகலப் பார்த்துக் கொண்டு நிற்கும் மணியின் ஞாபகம் வந்தது. அது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. போன ஆண்டு தீபாவளிக்கு அவன் ஊரில் இல்லை. படப்பிடிப்புக்காக வெளியூருக்கு போயிருந்தான். இப்போது மணி பட்டாசு கொளுத்துவானோ தைரியமாக?

முன்பும் நெற்றியிலும் இறங்கி இருந்தன. முகத்தின் பளபளப்பில் ஒரு அமைதி பொலிந்து நின்றது. ஏதோ ஒரு புதிய தோற்றத்தைப் பார்ப்பது போன்ற உணர்வு.

"வாங்க உட்காருங்க," என்று சொல்லி எதிரே இருந்த நாற்காலியைக் காட்டினாள். அவளிடம் வழக்கமான பதற்றம், நேரம் போதாமல் அலைகிற அவசரம், எதுவுமே இல்லை.

"இன்றைக்குப் படப்பிடிப்பு இல்லையா?"



குளித்து முடித்துக் காலை உணவும் அருந்தியாயிற்று. கொஞ்சம் எழுத்து வேலை பாக்கி இருந்தது. ஆனால் மனம் அதில் பதியவில்லை. ஒரு சூன்யமும் ஏக்கமும் அவனை நேராக நளினாவின் வீட்டுக்கு இழுத்துக் கொண்டு போயின.

அவள் வழக்கம் போல முன் அறையில் இல்லை. பின் கட்டில் அறையில் தனியாக உட்கார்ந்திருந் திருந்தாள். எண்ணெய்க் குளியல் முடித்து உலரவிட்ட கூந்தல். அலையாடும் மயிர்த்துளிகள் காதுகளுக்கு

"இல்லை இன்னும் இரண்டு மாதங்களுக்குத்தான். அப்புறம் படப்பிடிப்பே இல்லை."

"என்னது?"

"ஆமாம் சுந்தரம், இரண்டு வாரங்களாக வருகிற புதிய ஒப்பந்தங்களை எல்லாம் வேண்டாமென்று சொல்லிக் கொண்டிருக்கிறேன் வடக்கேயிருந்து இரண்டு தயாரிப்பாளர்கள் வந்து கேட்டார்கள் அவர்களையும் கூடத்திருப்பி அனுப்பிவிட்

www.thamizham.net - Free E Books No TM 14721

டேன் இந்தத் தொழிலிருந்து விலகிக் கொள்ளலாமென்று முடிவு செய்திருக்கிறேன்".

"விலகிக் கொள்ளவா?"

"அமாம் ஏன்? ஆச்சரியமாக இருக்கிறதா? நீங்க சொன்னதும் கூட மறந்து போய் விட்டதா? நடிப்புக்காக மட்டும் என்னை இத்தொழிலில் வைத்துக்கொள்ள முடியாதென்று நான் பதில்சொன்னது?" நளினி நிமிராமல் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். ஒருகணம் வேதனை படர்ந்து பிறகு தெளிந்த அந்த முகத்தைச் சற்று கூர்ந்து கவனித்தான் சுந்தரம்.

"நான் இப்போது சொல்லப்போவது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம்." அவன் முகத்தில் கலக்கம் இல்லை கண்மட்டும் அவனையே பார்த்தது. நாலைந்து வினடிக்கு மேல் அதைப் பார்க்கும் திறன் இல்லாதது போல, சுந்தரம் கண்ணைத் திருப்பிக் கொண்டான் சற்று மௌனமாக இருந்து விட்டு அவள் சொன்னாள்.

"நான் கலியாணம் செய்து கொள்ளப்போகிறேன் சுந்தரம்".

எங்கேயோ பார்த்துக் கொண்டிருக்கும் போது, பின்னால் வந்து குத்தியது போல ஒரு அதிர்ச்சி, புதிதாக எழுந்த ஒரு கலவரத்தில் வயிற்றை நமநம வென்று பிடுங்கிற்று. அவனையுமறியாமல், ஒரு ஏமாற்றம் புகையாக மூண்டெழுந்தது.

"திடீரென்று என்னென்னவோ புதிர் போடுகிறாயே நளினி?"

"புதிர் போடவில்லை புதிர் அவிழ்ந்து கொண்டு வருகிற நாள்தான் இது எது எதையோ எண்ணி, ஆசை

---

● அமெரிக்காவில் 1968ல் மட்டும் 55,300 பேர் ஆட்டோ விபத்தால் இறந்தனர் அவர்களில் 9 வயதுக்குப்பட்ட இளஞ்சிறுவர்கள் 3 800 பேர் 10 லிருந்து 19வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 9,800 பேர் மேலும் 20 லிருந்து 34 வயதுக்குட்பட்ட வாலிபப்பருவத்தினர் வயதடைந்த 16,500 மூத்தவர்கள் அதாவது 55 லிருந்து 74 வயதுக்கு பட்ட வர்கள் 9,300 பேர்கள் அடுத்து மிகவும் வயதடைந்த அதாவது கிழங்கள் 75 வயதைக் கடந்த முதியோர் 3.300 பேர்கள்.

---

களை விரட்டிக் கொண்டு போய்க் கொண்டிருந்தவளை நிறுத்தி இடம் காட்டினது நீங்க இல்லையா?"

"நானா?"

"ஆமாம், கஷ்மீரிலிருந்து வந்த பிறகு நான் அந்த யோசனையிலேயே தான் இருந்தேன். எனக்கு உண்மையாகக் கிடைக்கக் கூடிய மனநிம்மதி இந்த வாழ்க்கையில் இல்லை. அதுதான் விலகிக் கொள்ளலாம்னு முடிவு கட்டினேன்."

அவன் பதில் சொல்லவில்லை. என்னென்னவோ நினைவுகள், பொருளும் வடிவமும் இல்லாத ஆசைகள், ஒன்றாகக் குழுமிச் சேர்ந்து சட்டென்று காற்றில் சிதறும் மழை மேகங்களாகக் கலைந்தன. அவள் புதிய முகப் பொலிவுக்கு அர்த்தம் தெரிவது போலத் தோன்றியது. ஒரு ஏக்கத்தோடு அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"திரை உலக வழக்கப்படி, ஏற்கனவே மணமானவரைக் கலியாணம் செய்துக் கொள்ளப் போகிறதில்லை. பயப்படாதீங்க, அவர் நடிகரோ,

www.thamizham.net - Free E Books No TM 14721

டைரக்டரோ, பெரிய செல்வந்தரோ கூட இல்லை. சிறுவயதிலேயே என்னோடு பழகிய, எனக்குத் தெரிந்த ஒருவர் தான். பார்த்துப் பழகினால் நீங்களும் கூட அவரைவிரும்புவீர்கள்.''

அவள் பேசிக் கொண்டே இருந்தாள்; அவள் வாழ்க்கையில் பங்கு பெறப்போகும் அந்த இளைஞனைப் பற்றி; அவர்கள் நடத்தப் போகும் வாழ்க்கையைப் பற்றி; அந்தப் பட்டணத்து வாழ்க்கையை, கண்கூசுகிற புகழையும், காதுகூசுகிற வம்புப் பேச்சுக்களையும், துறந்து விட்டுக் கண் காணாமல் போக நினைத்திருக்கும் திட்டங்களைப் பற்றி

''மறுமடி நான் திரும்பி வரமாட்டேன். இந்த வாழ்க்கைக்கு கலியாணம் செய்து கொண்ட பிறகு நடிக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டு மறுபடி வந்து சேர்ந்து கொள்ளும் நப்பாசை எனக்கு இல்லை. ஆசைக்குக் கொஞ்சநாள் குடும்ப வாழ்க்கையும் குழந்தையும் ஆன பிறகு, மறுபடி அந்த உணர்ச்சிக்களைத் திரையில் வந்து நடிக்கும் ஆவலும் எனக்கு வராது என்னை மறுபடி நீங்கள் இந்தச் சூழ்நிலையில் சந்திக்கவே முடியாது.''

''நளினா.''

''சொல்லுங்கள்.''

''நீ செய்வது சரிதான் என்று தோன்றுகிறது, ஆனால்... எனக்கு எதுவும் பதில் சொல்லத் தெரியாமல்... கலக்கமாக இருக்கிறது.''

''கலக்கமே இல்லை, தெளிவுதான் இனிமேல். உங்களிடம் நான் ஒன்று கேட்கலாமா?''

''சொல்லு நளினா.''

''நான் அப்படி நிம்மதியாக இருக்கும்போது, மறுபடி உங்களுடைய பழைய எழுத்துக்களைப் படிக்கும் சந்தர்ப்பத்தை நீங்கள் எனக்குக் கொடுப்பீர்களா?''

''நளினா நீ செல்வது—''

நளினா எழுந்து கண்ணாடியருகே போனாள். ஆள் காட்டி விரலில் சிறிது குங்குமத்தை எடுத்து நெற்றியில் வைத்துக் கொண்டு அவன் புறம் திரும்பினாள். அந்த நெற்றியின் துலங்கிய தூய்மை ஒரு கனம் அவனை அசைவின்றி நிற்க வைத்தது.

''ஆமாம் அதுதான் என் ஆசை. இந்த வாழ்க்கை உங்களுக்கு வேண்டாம். நீங்களும் கிராமத்துக்கே திரும்பிப் போய் விடுங்கள். இயற்கையான சூழ்நிலையில் இயல்பான குடும்பப் பின்னணியில், வாழும் எளிய வாழ்க்கையில், உங்கள் நெஞ்சிலிருந்து புறப்பட்டு வரும் கற்பனை என்னைப் போல சில உண்மையான ரசிகர்கள் படித்து அனுபவிக்கும்படி எழுதுங்கள் இந்தப் புகழையும், கைதட்டல்களையும். போலிப் பின்னணியையும் ஏற்றுக் கொண்டு நீங் வாழ்ந்தது போதும்பணம் கொடுக்கிறவர்கள் சொன்னபடியெல்லாம் நீங்கள் எழுதியது போதும். இனிமேலும் இந்த சுமைக்கு உங்கள் திறமையை அடிமைப் படுத்திக் கூனல் விழும்படி வைக்காதீர்கள். நீங்கள் சேர்த்த சொத்து, திரட்டிய பணம்,

● புள்ளிவிவர ஆய்வாளர்களின் கணக்குப்படி 1970 ஆம் ஆண்டு செப்டம்பருக்குள் 65,000 பேர் அமெரிக்காவிலும், கனடாவிலும் போக்குவரத்து விபத்தால் கொல்லப்படுவர் அடுத்து 5 மில்லியன் மக்கள் காயப்படுத்தப்படுவர் எனவும் அஞ்சப் படுகின்றது.

www.thamizham.net - Free E Books No TM 14721

● அமெரிக்காவில் ஒவ்வொரு 39 நிமிடத்திற்கும் ஒருவர் கொலை செய்யப்படுகின்றார். பலவந்தமாக கற்பழிக்கப்படுவது ஒவ்வொரு 17 நிமிடத்திற்கும் ஒன்றுவீதம் ஒருவரை ஒருவர் பலாத்காரமாகத்தாக்குதல் 2 நிமிடத்திற்கு ஒன்றுவீதம். வாகனம் திருட்டுப்போதல் ஒவ்வொரு 4 செகண்டுகளுக்கு ஒன்றுவீதம். மேலும் ஒவ்வொரு 17 செகண்டுக்கும் ஒருதிருட்டு நடைபெறுகிறது.

எல்லாம் போதும், என்னைப்பார்த்துச் சொல்லுங்கள். போதாதா?''

சுந்தரம் குறுகி உட்கார்ந்திருந்தான். அவனால் எதுவும் சொல்ல முடியவில்லை. தலையை அசைக்கக் கூட வழியில்லை.

''நான் சொல்வதைச் செய்கிற துணிவும் நெஞ்சுத்திடமும் உங்களுக்கு வரவில்லையா? எனக்கு எடுத்துச் சொன்னீர்கள். எனக்கு மனத் துணிவு பிறந்து விட்டது. உங்களுக்கு இன்னும் அந்த தைரியம் வரவில்லையா?''

''உம்'' என்று மூச்சுக் கொட்டினான் சுந்தரம்.

வழி நெடுக அந்தக் கேள்வி அவன் மனத்தில் துள்ளிக் கொண்டே இருந்தது ஒரு நோவில் விழுந்து தத்தளித்தது.

''தைரியம் வரவில்லையா?'' என்று கேட்ட கேள்விக்கு என்ன பொருள்? கேள்வியா, கேலியா அது? கொள்கையையும் லட்சியத்தையும் தூக்கி வைத்து விட்டு வளைந்து கொடுப்பவன் என்று அவனை குற்றம் சாட்டியது நினைவுக்கு வந்தது. சிரிப்பின் ஒளியில் புரியாத ஒன்றை அவனுக்குக் காட்டி விட்டாள் நளினா. அது கேலி இல்லை உண்மைதான். அவளுக்குத் துணிவு இருக்கிறது. அவனுக்கும் இருக்க வேண்டியது தான். அவன் வாழ்க்கை இன்னும் எப்படி எப்படியோ ஓடி இருக்கலாம். நளினா அவனை வேறு வழிக்குத் திருப்பி இருந்தால்? அவன் சொந்தப் படம் எடுக்க முனைந்திருந்தால்? அவசரப் படங்களுக்கு அவன் திடீர் கதைகள் எழுதிக் கொடுக்க முனைந்து வந்திருந்தால்? அவை நடக்கவில்லை. அவனை எழுப்பிய விழிப்பு.

கிராமத்தில் ஒரு நாள் இரவு அவன் எழுதிக் கொண்டே இருந்தான். அப்பொழுதெல்லாம் குறுந்தாடி வைத்திருப்பான் கையைத் தலைக்கு அணைப்பாகக்கொடுத்து, அரிக்கேன் விளக்கின் மங்கிய ஒலியில் கண்ணை மூடி யோசனை செய்து கொண்டே, சிறிது அயர்ந்து விட்டான். பின்புறமாக வந்து சேலையின் தலைப்பை முறுக்கி அவன் காதில் லேசாக நுழைத்தாள் ராதை 'திடுக்' கென்று விழித்தவன் காதுகளில் குறும்புச் சிரிப்பு அலை அலையாக மிதந்தது கையை நீட்டி பின்புறமாக நின்றவளை முன்னால் இழுத்துக் கொண்டான்.

எவ்வளவு இனிமையான நாட்கள் அவை? அந்த எளிமையும் கனிவும் கொஞ்சும் கனவுகளிலிருந்து அவன் ஏன் விழித்துக் கொண்டான்? அது ஒரு விழிப்பு. இன்று இன்னொரு விழிப்பு. நளினா அவனைத் தட்டி எழுப்பி இருக்கிறாள்......

இலையின் முன் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் சட்டென்று நிமிர்ந்தான். ராதை தட்டும் கரண்டியுமாக உள்ளே திரும்பிப் போய்க் கொண்டிருந்தாள்.

www.thamizham.net - Free E Books No TM 14721

அங்கே வந்த போது இருந்த குழந்தைத்தனமும் குறும்பும் அவள் முகத்தில் இல்லை இப்போது. உடலின் பொன்னிறம் கூடச் சற்று மறைந்து கொஞ்சம் கனித்து விட்டது. பழம் பழுத்து, பறித்து கூடையில் வைத்த மறுநாள் கனிவு மாதிரி. யௌவனத்தின் உச்சியைக் கடந்து இறங்கி விட்ட பொலிவு.

ஆனால் அந்தக் கனிவில் தான் அமைதி தெரிகிறது அவனுக்கு. கவர்ச்சியை நம்பாத அழகு தெரிகிறது. அவன் மனத்தின் புயல்களிலிருந்து ஒதுங்க ஒரு நிம்மதியான துறைமுகம் காண்கிறது அங்கே. நெஞ்சு அவனையறியாமல் நெகிழ்ந்தது.

"ராது—"

திரும்பி வந்தவள் சட்டென்று அப்படியே நின்றாள். அந்த பழைய குரல், அழைக்கும் விதம், கண்ணில் தெரியும் இதயம் எல்லாம் அவளுக்குப்புரிவது போல இருந்தது. அவள் கண்களும் கலங்கின.

"நாம் திரும்பிக் கிராமத்துக்குப் போய் விடலாம். பட்டணத்து வாழ்க்கை போதும் என்ன சொல்கிறாய்?" என்று கேட்டு அவன் நிமிர்ந்த போது, அவள் தரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். "நான் என்ன சொல்ல முடியும்?" என்று அவள் கண் தரையைப் பார்த்துச் சொல்வது போல இருந்தது.

"நீங்கள் சொல்லுவதைத் தான் நானும் சொல்ல இருந்தேன். ஆனால் நான் என்ன செய்திருக்க முடியும்?" என்று கூறுவது போல் தோன்றிற்று அந்தப் பார்வை. இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடியே, வாயைத் திறந்து பேசாமல் பேசிக் கொண்டிருக்கும் இந்தக் கணம் இருவருக்குமே விந்தையாகத் தான் இருந்தது.

தயங்கிக் கொண்டே சிறிது சிறிதாக ஒரு தூணை தள்ளி வந்து நின்றாள். அவனைக் கேள்விக்குறிதெரிய நிமிர்த்து பார்த்தாள்.

"நிச்சயமாக முடிவு செய்து விட்டீர்களா? மறுபடியும் இந்த வாழ்க்கைக்கு ஆசைபடுகிற மனசு உங்களுக்கு வந்து விடாதே?"

ராதை அவன் நெஞ்சை தட்டிப் பார்க்கிறாளா? துணிவு இருக்கிறதா என்று நளினு கேட்டது போல, இவளும் கேட்டுப் பார்க்கிறாளா?

"முடிவு செய்து விட்டேன் ராது. இருக்கட்டும் இந்த உறுதி எனக்கு என்றைக்கும் இருக்கட்டும். வெளிச்சம் மாதிரி ஒரு நல்ல எண்ணம் எனக்குத் தோன்றி இருக்கிறது. அதை ஊதி அணைக்க வேண்டாம். அப்புறம் இருட்டுத்தான் மிஞ்சும் புரிகிறதா?... என்னைப்... புரிந்து கொள்கிறாயா... ராது?"

---

## விஸ்டராமா

‡ சின்மாஸ்கோப், பானுவிஷன், 70 m.m., சர்க்கராமா, சினிராமா இவைகளை அடுத்து 'விஸ்டராமா' என்ற புதிய ரக சினிமா ஆசியாவிலேயே முதன் முறையாக எர்ணாகுளத்தில் தொடங்கப் பெற்றிருக்கிறது. வளைந்த அமைப்புடன் கூடிய இதன் திரையின் அளவு 84 × 32' இதன் விசேஷம் படத்தில் பொருள்களின் கன பரிமாணமும் தெரியும் என்பதே. இதனை இங்கிலாந்தைச் சேர்ந்த ஆண்ட்ரு சிமித் ஹார்க்னஸ் லிமிட் என்ற கம்பெனியார் கண்டு பிடித்துள்ளார்கள்.

www.thamizham.net - Free E Books No TM 14721

சட்டென்று அவன் குரல் தேம்பிற்று. அவனால் மேலே பேச முடியவில்லை. கையில் இருந்த தட்டை அப்படியே கீழே வைத்து விட்டு ஓடி வந்தாள் ராதை. அவனை ஒரு வெள்ளம் அடித்துக் கொண்டு போவது போல இருந்தது. மெதுவாய் அவன் முகத்தைத் தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். அவன் கன்னங்களின் வாய்க்கால்களில் பெருகிய நீரை விரல்கள் பரிவாகத் துடைத்தன. அவளுடைய கன்னங்களும் திடீரெனச் சில்லிட்டன.

ஜன்னல் வழியே புகுந்த தென்றல் அவர்கள் மீது வீசி அலைந்து கொண்டு நழுவிற்று.

ரயில் ஓடிக் கொண்டிருந்தது.

ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து ராதை எதிரே வான் முகட்டில் மின்னிய தங்க ஓடைகளையும், ரோஜா நிறப் பஞ்சுகளையும் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுக்கு எதிரே எதையும் பார்க்கத் தோன்றவில்லை. அவளையே கண்ணால் கவர்ந்தபடி உட்கார்ந்திருந்தான் சுந்தரம். அறிவும் அமைதியும் கலங்காத நிதானமும் அமர்ந்த முகத்தைப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தான்.

வண்டியின் தாளம் மாறாத ஒலி கேட்டுக் கொண்டிருந்தது. ராதை சற்றைக்கொரு தடவை பறந்து அலைந்த கூந்தல் துளிரை விரலால் சேர்த்து விட்டுக் கொண்டிருந்தாள். அவள் பார்வை ஒரு கணம் அந்த முகத்தைக் கடந்து போயிற்று.

காவேரி மண்ணில் உரம் குடித்து நிமிர்ந்த பச்சை வயல்கள் பறவைகளின் ஒலி கேட்டும் இலைகளும் பூக்களும் செறிந்த மரங்களும். ஜன்னல் ஓரமாகப் போட்டிருந்த பழைய மேஜை. அதன் எதிரே உட்கார்ந்து அவன் எழுதுகிறான், அந்தப் பசுமையையும் அமைதியையும் நுகர்ந்தபடி

இளங்காலை நேரத்தில் இதமான நீரில் குளித்து விட்டுத் திரும்பியது போன்ற ஒரு தூய்மை அவன் மனத்தில் நிறைந்திருக்கிறது இலைகளின் வழியே வந்து விழுந்து மின்னும் தூய வடிகட்டிய கதிரொளியைப் போல, ஒரு ஒளி அவன் நெஞ்சில் ததும்புகிறது கலங்காத ஓடையாக் அவன் கற்பனை மெல்ல மெல்ல நழுவி ஓடிக் கொண்டிருக்கிறது...

அந்த வாழ்க்கை அவனுக்குக் காத்திருக்கிறது அது அவனுக்கு நிச்சயமாகக் கிடைக்கும். அதில் புயல் இல்லை; புழுதி இல்லை; கண்ணைக்கூசலுக்குப் கிறக்கம் இல்லை.

அதில் தென்றல் வீசும். அமைதியான தென்றல் மட்டும் தான் வீசும். அது அவனுக்குப் போதும்.

முற்றும்.

---

“தென்றல் வீசும்” பற்றி நேயர்கள் இதுவரை எழுதிய, எழுதும் கடிதங்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

---

www.thamizham.net - Free E Books No TM 14721

மாண்புமிகு அமைச்சர்

# ப. உ. சண்முகம் அவர்களிடம்

சில நிமிடங்கள்

# "மாணவர்கள் அரசியல்வாதிகளால் கெடுகின்றனர் என்பது பூச்செண்டின் திடமான கருத்து"

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்றோம், அமைச்சரிடம் அவரும் திடமாகக் கூறினார் :- "அரசியல் வாதிகள் மாணவர்களைக் கெடுக்கவில்லை. அப்படி அரசியல் வாதிகளால் மாணவர்களை கெடுக்கவும் முடியாது."

"அப்படியென்றால் மாணவர்கள் தாங்களே அரசியலில் ஈடுபடுகிறார்களே அதை பற்றி உங்கள் கருத்து என்ன?"

"அரசியலை மாணவர்கள் நிச்சயம் தெரிந்து வைத்திருக்க வேண்டும் ஆனால் மாணவப்பருவம் வரையில் அரசியலில் பங்கேற்காமல் இருப்பது நல்லது என்பது என் கருத்து."

"ஆனால் மாணவர்கள் அடிக்கடி போராட்டங்கள் நிகழ்த்துவதைக் காண்கிறீர்கள். அதெல்லாம் எப்படி ஏற்படுகின்றது என்று நினைக்கிறீர்கள்?"

"உணர்ச்சி வசப்பட்ட பல மாணவர்களால் 'பலதரப்பட்ட காரணங்களுக்காக பல நேரங்களில் மாணவ சமுதாயத்தில் கொந்தளிப்பு ஏற்படுகிறது. துடிப்புள்ள இளைஞர்கள் கொந்தளிப்போடு இருப்பதில் ஆச்சர்யமில்லை. அதை அரசியல் வாதிகள் பயன்படுத்தாமல் இருந்தால் அதுவே போதும் என்று நினைக்கிறேன்."

www.thamizham.net - Free E Books No TM 14721

"இப்படி அடிக்கடி மாணவர் குழப்பங்கள் ஏற்படுகின்றனவே அவற்றை சரி செய்ய உங்கள் ஆலோசனை என்ன?"

"மாவட்டவாரியாக உள்ள கல்லூரிகளிலிருந்து, கல்லூரித் தலைவர்களைக் கொண்டு, மாவட்ட ஆட்சி மன்ற தலைவர்களாக கொண்ட ஒரு குழு அமைக்கலாம். மாணவர்கள் சமுதாயத்தில் ஏற்படுகின்ற சில்லறைத் தகராறுகளில் அரசியல் வாதிகள் தலையிடாமல் இந்தத் தலைவர்களே தீர்ப்பது உகந்த வழியாக இருக்குமென்று நம்புகிறேன்."

"கல்விமுறை சரியில்லாத காரணத்தால் மாணவர்கள் குழப்பத்துக்குள்ளாகிறார்கள். பெரும்பாலும் தொழிற் கல்வி கற்ற மாணவர்கள் எதிர்காலத்தில் நம்பிக்கையற்று நிற்கிறார்களே; அரசியல் வாதிகள் என்ன செய்யப்போகிறீர்கள்!"

"தொழிற் கல்விபயில்கின்ற மாணவர்கள் அரசாங்கத்தை நம்பி இருக்கிறோம் என்ற எண்ணத்தை வளர்ப்பதைவிட தன்னம்பிக்கையை வைத்து பயில வேண்டும். அரசாங்கம் தொழிற் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் அனைவரையும் வேலைக்கு எடுத்துக் கொள்ளுதல் என்பது எந்த அரசாங்கத்தாலும், எந்த சமயத்திலும் செய்ய முடியாத ஒன்று. எனவே பயில்கின்ற மாணவர்கள் அரசாங்கத்தில் வேலை கிடைக்க வில்லையே என்று சோர்வடையாமல், கல்வியைப் பயன் படுத்தி வாழ்க்கையை சிறப்பாக்க வேண்டும். அப்படி வேலையில்லாமல் இருக்கின்றவர்கள் அரசாங்கத்தின் உதவியைக் கோரலாம், கற்ற தொழிலைக் கொண்டு வாழ்க்கை நடத்துவதற்கு."

"தங்கள் கருத்துக்களுக்கு மிக்க நன்றி விடைபெறுகிறோம்."

"வணக்கம்."

For Anything and Everything in Medicines

PLEASE REMEMBER

HAKIM MEDICAL CONCERN

DISPENSING CHEMISTS AND DRUGGISTS

274, Thambu Chetty Street,

(NEAR MUTHIALPET GH SCHOOL)

Madras-1.

Phone: 23464

www.thamizham.net - Free E Books No TM 14721

# தொழில் உலகத்தில் ஓர் "இரத்தினம்"

ஒரு ஞாயிற்றுக் கிழமை காலை, பரபரப்பான சென்னையின் அமைதியான ஒரு பகுதியில் அமைந்துள்ள கண்கவர் இல்லம் ஒன்றினுள் நுழைகிறோம். கட்டி அப்போது தான் முடித்திருக்கிறார்கள் என்று தோன்றிய வீட்டில் புதிய வாடையும், பளிங்குத் தரைகளும், கனவுலகத்தில் திளைக்க வைக்கும் தோற்றமும், அதில் உள்ளே இருக்கும் அழகுககுக் கட்டிறம் கூறுகின்றன. மென்மையான மாடிப்படிகளில் ஏறி மேலே உள்ள அழகிய கூடத்துக்கு செல்லும் போது "வணக்கம்" என்ற வண்ணம் கை குவித்தவாறு புன்னகையுடன் பொலிவான தேற்றத்துடன் காட்சி தருகிறார்

**திரு இரத்தினம்** அவர்கள்

ஆம்! அம்பத்தூர் செல்லும் சாலையில் கம்பீரமாக அமைந்துள்ள லூக்காஸ் - டி. வி எஸ். நிறுவனத்தின் அதிபரும், தென்னகத்தின் பெருமைமிகு தொழில் மேதை டி. வி. சுந்தரம் ஐயங்கார் அவர்களின் பேரருமான இவர் தான், எங்களை பேருவகையுடன் சந்தித்தவர்.

எங்கள் அனைவருக்கும் ஆசனங் காட்டி விட்டு, தான் மட்டும் அறையின் நடுவிலிருந்த ஊஞ்சலில் அமர்ந்தார். மென்மையான வெள்ளை வேட்டி அணிந்து ஊஞ்சலில் லேசாக ஆடிய வண்ணம், கையில் "செஸ்டர் பீல்டு" சிகரெட்டை புகைத்தபடி, "என்ன வேண்டுமானாலும் கேளுங்கள் பதிலளிக்கிறேன் மடியில் பணமிருந்தால் தானே மனதில் பயம். எனக்கு எதுவும் கனமாக உள்ளத்தில் இல்லை எனவே எதையும் திறந்து நான் சொல்ல முடியும்" என்றார் கம்பீரமாக.

பேட்டி ஓரளவு ஆங்கிலத்திலும் அவ்வப்பொழுது தமிழிலும் நடந்தது. நீரோட்டம் போன்ற தெளிவான இவரது ஆங்கிலப் பேச்சும் மிக சரளமாக கேள்விகளுக்கு பதிலளித்த முறையும் இங்கு குறிப்பிடும் பதில்களால் மட்டும் நீங்கள் உணர்ந்து விட முடியாது நேரிலே வந்து காதால் கேட்டால் தான் உணர்வீர்கள் நாங்கள் மாணவர்களாதலால் இயற்கையாக ஒரு கேள்வி இப்படி அமைந்தது. "உங்கள் மாணவப் பருவம் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள். அப்போதெல்லாம் மாணவர் ஆசிரியர் உறவெல்லாம் எப்படி இருந்தது?"

'நான் பள்ளிப் படிப்பெல்லாம், மயிலாப்பூர் பி. எஸ். உயர்நிலைப் பள்ளியில் படித்தேன் இன்றிருப்பதற்கும் அன்றிருந்ததற்கும் நிறைய நிறைய வேறுபாடுகள். வாத்தியார் தவறு செய்யும் போது அடிப்பார். வாத்தியார் என்றால் எங்களுக்கெல்லாம் சிம்ம சொப்பனம்! ஆனால் அதே நேரத்தில் உயர்ந்த மரியாதையும் ஆசிரியர்களிடம் கொண்டிருந்தோம். எனது கல்

www.thamizham.net - Free E Books No TM 14721

லூரிப் படிப்பு 1942-ல் சென்னை மாநிலக்கலூரியிலும் பிறகு மதுரைக் கல்லூரியிலும் நடந்தது."

"சாதி அடிப்படையில் சில இடங்களில் வேலை வாய்ப்புக்கள் அளிக்கப் படுவதாகத் தெரிகிறதே அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?"

"மனப் பூர்வமாக இதனைக் கண்டிக்க வேண்டியது தான். வேலை வாய்ப்புக்கள் நிச்சயமாக திறமை, படிப்பு இவற்றின் அடிப்படையிலே மட்டும் அமைய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனது நிறுவனத்தில் இந்த அடிப்படையில் மட்டுமே வேலையாட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்."

"டி. வி. எஸ். கூட்டமைப்பில் பல்வேறு புதிய நிறுவனங்களை உருவாக்கி தொழிலுலகில் மாபெரும் வெற்றி பெற்று வருகிறீர்கள் உங்கள் வெற்றிக்கு எது காரணம் என்று நினைக்கிறீர்கள்?"

"ஆங்கிலத்தில் Honesty & Integrity என்று கூறுவார்களே அந்த அடிப்படையில் எங்கள் தொழில் நிறுவனங்களை அமைத்துள்ளோம். மற்றொன்று எங்களுக்கு பெரியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சொல்வது எதையும் நாங்கள் தட்டுவதில்லை. அவர்கள் கண்டறிந்த அனுபவப் பாதையில் எங்கள் புது முயற்சிகளை வகுக்கிறோம். இது தான் காரணமென்று நினைக்கிறேன்."

வெளி நாடுகள் பலவற்றிற்கு சென்று அங்குள்ள தொழில் நிறுவனங்களை துருவி ஆய்ந்தவர் திரு. இரத்தினம். இப்போதும் அடிக்கடி ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று வருகிறார்.

ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு முறை சென்று வந்தவர்கள் கூட முழுக்க முழுக்க ஐரோப்பியர்களாக மாறி நம் பண்பாட்டை அறவே மறந்து அந்த போலி நாகரீகத்துக்கு தம்மை அடிமைப் படுத்திக் கொள்வதை காண்கிறோம். திரு. இரத்தினம் அவர்கள் இதற்கு முற்றிலும் நேர்மாறானவர். தனது குழந்தைகளை ஆங்கிலப் பள்ளிகளில் படிக்க வைத்திருக்கும் அதே நேரத்தில், இல்லத்தில் அவர்களுக்கு இந்திய பண்பாட்டிற்குகந்த போதனைகளை அளித்து வருகிறார். சமய நூல்களையும் இந்திய பழக்கங்களையும் பண்பாடுகளையும் அவர்கள் மறக்கவே கூடாது என்பது இவர் எண்ணம். பள்ளியில் ஆங்கிலம் பேசினாலும் இல்லத்தில் இனிய தமிழையே அவர்கள் பேசி வருகின்றனர்.

இந்த சில பக்கங்களில் எழுதி முடிக்க முடியாத அளவிற்கு சுவையாக அவருடன் நிகழ்த்திய உரையாடலைக் கேட்ட போது நேரம் சென்றதே தெரியவில்லை சுமார் 1 மணி நேரம் எங்களையறியாமல் சென்றது.

இறுதியாக, மாணவர்கள் நடத்தும் இந்த பூச்செண்டு பத்திரிகையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" எனவேும் ஆவலோடு

"இந்த முயற்சி நாட்டு நலனுக்கும் மாணவருலகுக்கு இன்னும் பெரிய சேவையாக இருக்க வேண்டும். இதற்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள் எப்போதும் இருக்கும்." என்றபடி புன்னகையுடன் விடையளித்த காட்சி இன்றும் நெஞ்சத்தில் நிற்கிறது.

—பேட்டி: ஆசிரியர் குழு

பதிப்பாளரும் ஆசிரியரும்: சு. இராசேந்திரன், எம்.ஏ., 19,நௌரோசி வீதி சென்னை-31. அச்சிடுபவர்: வில்லியம் பெர்னாண்டஸ், ரெக்ஸ் டிரேடிங் கம்பெனி (பிரிண்டிங் செக்ஷன்). சென்னை-1.

www.thamizham.net - Free E Books No TM 14721

# Sakthi Sugars Limited

Manufacturers of : HIGH QUALITY WHITE CRYSTAL SUGAR

AND

PRODUCERS OF "SAKTHI" HYBRID SORGHUM,

MAIZE AND BAJRA SEEDS.

*Regd. Office* : 72, Sengupta Street, Ramnagar, Coimbatore-9.

*Factory* : Sakthi Nagar, P. O. ERODE Rms

*Managing Agents* :

M/s. BHAVANI ENTERPRISES

POLLACHI

www.thamizhagam.net - Free E-Books: No TM 14721

VGP

இந்தியாவிலேயே

மிக அதிகமான ரேடியோக்கள்

விற்பனை செய்பவர்கள்



murphy

Delights the home!

V. G. பன்னீர்தாஸ் & கோ.

சைதாப் பேட்டை, சென்னை - 15.

போன்: 442333—442334

கிளை:

தி. நகர் சென்னை-17.

போன்: 440246

Printed by William Fernandez at REX TRADING CO. PRINTING SECTION.

www.thamizham.net - Free E Books No:TM 14721